தமிழ்த் தேசியத்

# தமிழர் கண்ணோட்டம்

10 - 4 திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி மார்ச்சு 1 - 15 2017 ரூ. 15/-

## கொந்தளிக்கும் தமிழ்நாடு



# "திராவிடம் : தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியதா?"

# திருச்சி – சென்னையில் நூல் அறிமுக விழா

தமிழ்த்தேசியப்பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் அவர்கள் எழுதிய "திராவிடம் : தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியதா?" – நூலின் அறிமுக விழாக்கள், திருச்சி மற்றும் சென்னையில் சிறப்புற நடைபெற்றன.



திருச்சி



சென்னை

### திருச்சி

திருச்சியில் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில், பிப்ரவரி 25 காரிக் (சனி)கிழமை மாலை, தொடர்வண்டி நிலையம் அருகிலுள்ள ராஜா (ஓட்டல்) உணவகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு, த.க.இ.பே. நடுவண் குழு உறுப்பினர் பாவலர் நா. இராசாரகுநாதன் தலைமை தாங்கினார். தோழர் மு.வ. இரத்தினம் வரவேற்புரை வழங்கினார். நிகழ்வின் தொடக்கத்தில், மாணவி மெய்கீர்த்தி உரையாற்றினார்.

தமிழ்த்தேசியப் பேரியக்க மாநகர்ச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன் தொடக்கவுரையாற்றினார். திருச்சி மாவட்டதமிழ்அமைப்புகளின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் திரு. வீ.ந. சோமசுந்தரம் வாழ்த் துரை வழங்கினார்.

திருச்சி – தனிநாயகம் அடிகள் தமிழியல் கல்லூரி முதல்வர் அருள்திரு. அமுதன் அடிகள் நூலை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார். தமிழ்நாடு தமிழ்வழிப் பள்ளி நிர்வாகிகள் சங்கத் தலைவர் திரு. அ.மு. முஸ்தபா கமால், தமிழக உழவர் முன்னணி திருச்சி ஒருங்கிணைப் பாளர் திரு. ஆ. செல்லையன், பொறியாளர் துரை. இரவி, பொறியாளர் இரா.பே. இராசப்பா ஆகியோர் நூல் படி பெற்றனர்.

புதுக்கோட்டை மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் த. மணி நூலாய்வு உரையாற்றினார். நிறைவில், நூலாசிரி யரும், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவருமான தோழர் பெ. மணியரசன் ஏற்புரை நிகழ்த்தினார். தோழர் வெள்ளம்மாள் நன்றி நவின்றார்.

### சென்னை

பிப்ரவரி 26 – ஞாயிறு மாலை, சென்னை எழும்பூர் இக்சா அரங்கில் நடைபெற்ற நிகழ்வுக்கு, தூயதமிழ்க் காவலர் கு.மு. அண்ணல் தங்கோ அவர்களின் பெயரன் திரு. செ. அருட்செல்வன் தலைமை தாங்கினார். தமிழர் கண்ணோட்டம் ஆசிரியர் குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி வரவேற்றார்.

சென்னை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பி. யோகீசுவரன் நூலை வெளியிட, தென்மொழி ஆசிரியர் முனைவர் மா. பூங்குன்றன் முதல்படி பெற்றுக் கொண்டார்.

பின்னர், மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் த. மணி, ஊடகவிய லாளர் திரு. கார்ட்டூனிஸ்ட் பாலா ஆகியோர் நூலை திறனாய்வு செய்து உரையாற்றினார். தமிழர் நலம் பேரியக்கத் தலைவர் இயக்குநர் மு. களஞ்சியம் சிறப்புரை நிகழ்த்தினார். நூலாசிரியரும், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவருமான தோழர் பெ. மணியரசன் ஏற்புரை நிகழ்த்தி னார். தமிழ்த்தேசியப் பேரியக்கச் செயல்பாட்டாளர் தோழர் செ. ஏந்தல் நன்றி கூறினார்.

அரங்கம் நிரம்பிய கூட்டமாக இரு நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றன. நிகழ்வில், புலவர் கி.த. பச்சையப்பனார், எழுகதிர் ஆசிரியர் திரு. அருகோ உள்ளிட்ட தமிழறிஞர் களும், தமிழின உணர்வாளர்களும், பல்வேறு அமைப்பு களைச் சேர்ந்தவர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

# தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

ஆசிரியர் - வெளியீட்டாளர்

**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர்

**கி.வெங்கட்ராமன்**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கவிபாஸ்கர், க. அருணபாரதி, நா.வைகறை, அ. ஆனந்தன், பொன்னுசாமி, க. காந்திமதி, நா. இராசாரகுநாதன் ப. செம்பரிதி, கதிர்நிலவன்**

வடிவமைப்பு

**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு

**தமிழ்த் தேசிய வரைகலை,**

**சென்னை - 17.**

அச்சாக்கம்

**பிரின்ட் பாஸ்ட்,**

**வேளச்சேரி, சென்னை - 42.**

**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை -600 078.
தொலைப்பேசி : 044-24742911

மின்னஞ்சல்: tkannotam@gmail.com
tamizhdesiyam@gmail.com
இணையம்
http://tamizharkannotam.blogspot.com
http://www.kannotam.com

❖

**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**
இணையம்
http://tamizhdesiyam.com

❖

கீற்று இணையதளத்திலும் படிக்கலாம்
www.keetru.com

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 350 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ 1000 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ 1600 |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ 3000 |




19

**தண்ணீர்த் தவிப்பு**

க. அருணபாரதி


மாறுவேடத்தில் வந்த மீத்தேன் திருடனை
நெடுவாசல் மக்கள் பிடித்தனர்
*- பெ. மணியரசன்*.........6

காவிரித்தாய்க் காப்பு முற்றுகை
*காவிரி உரிமை மீட்புக்குழு களம் இறங்குகிறது*.........11

ஒப்பந்தத் தொழிலாளர் அவலத்தில்
அரசு - நீதித்துறை - தொழிற்சங்கப் பங்கு
*- மேனாள் நீதிபதி து. அரிபரந்தாமன்*.........13

நிகரன் விடைகள்.........17

நீங்கள் பின்பற்ற மட்டுமே பிறந்தவர்கள் இல்லை
வழிகாட்ட உரிமையும் தகுதியும் படைத்தவர்கள்
- தோழர் பெ.ம. பேச்சு.........23

தமிழர் மரபை அழிக்கும் ஜக்கி
- யோகேஸ்.........26

வரலாறு அறிவோம்:
பைந்தமிழ் ஆசான் கா. நமச்சிவாயர்
- கதிர்நிலவன்.........28

பவானியில் தடுப்பணைகள் கட்டினால்
மூன்று மாவட்ட மலையாளிகளைத் திரும்ப
அழைத்துக் கொள்க!
கேரளத்திற்கு பெ. மணியரசன் கோரிக்கை.........32

மூத்தத் தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியம்
காலமானார்.........34



உறுப்புக்கட்டணங்கள் (சந்தா), த.க. விற்பனைத் தொகை
ஆகியவற்றைக் கீழ்க்காணும் வங்கி முகவரியில் செலுத்தலாம்
**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை,**
**இந்தியன் வங்கி,** தி.நகர், தெற்கு உஸ்மான் சாலை -கிளை
**சேமிப்புக் கணக்கு எண்: 6126971024**
IFSC CODE: IDIB000T115

ஆசிரியவுரை
தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்
மார்ச்சு 1-15, 2017

# ஊர் மேயும் தமிழக அரசியலை உலுக்குங்கள்!

தமிழ்நாடு கொந்தளிக்கிறது! மூத்த அரசியல்வாதிகளோ பதவி வேட்டைக்காகக் கொந்தளிக்கிறார்கள்; மோதிக் கொள்கிறார்கள்!

இளைஞர்கள்தாம் தமிழர் உரிமைகளுக்காக, தமிழர் நலன்களுக்காகக் கொந்தளிக்கிறார்கள்!

தைப்புரட்சியின் வெற்றியை அடுத்து, நெடுவாசல் புரட்சியில் இறங்கியுள்ளார்கள்.

காவிரிச் சமவெளியில் மீத்தேனை விரட்டியது, காளை தழுவும் உரிமையை மீட்டது போன்ற தமிழர் வாழ்வுரிமை மற்றும் பண்பாட்டு உரிமைகளைக் காத்ததில் மூத்த அரசியல்வாதிகளுக்கும் முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் எந்தப் பங்கும் இல்லை!

இப்போதும், எப்போதும் இந்தக் கட்சிகள் பதவி வேட்டைக்காக - பண வேட்டைக்காகப் பரபரப்பாகச் செயல் படுகின்றன. ஒன்றை எதிர்த்து மற்றொன்று போராடுகின்றன. அப்பப்பா, அதில் காட்டும் விறுவிறுப்பும் வேகமும் புயலைக்கூடத் தோற்கடிக்கும்.

அந்த வேகத்தில் நூற்றில் ஒரு பங்கு வேகம் கச்சத்தீவு, காவிரி, பாலாறு, பவானி உரிமைகளைக் காப்பதில், மீட்பதில் இவை காட்டியதில்லை.

இக்கட்சிகளின் குறிப்பாகக் கழகங்களின் தலைவர்களை இப்படியே கோயில் மாடுகளைப் போல் ஊர்மேய அனுமதித்துவிட்டு, தமிழர் உரிமைப் போராட்டங்களில் மட்டும், இளைஞர்கள் கவனம் செலுத்துவது போதுமா?

நெடுவாசலில் நச்சுக்குழாய் இறக்கும் அறிவிப்பை நடுவண் அமைச்சகம் 15.2.2017 அன்று அறிவித்தது. அன்றிலிருந்து தமிழ்நாட்டில் அச்சமும் பீதியும் பற்றிக் கொண்டது. மறுநாள் நெடுவாசல் போராட்டக் களமாகியது.

போராட்டத்தின் 12ஆம் நாள், இந்திய அரசு அறிவிப்பு வந்த 13ஆம் நாள் (28.02.2017) தமிழ்நாட்டின் அ.தி.மு.க. அமைச்சர் கே.சி. கருப்பணன், நெடுவாசல் எரிவளித்திட்டத்திற்குத் தமிழ்நாடு சுற்றுச்சூழல்துறையிடம் நடுவண் அரசு அனுமதி பெறவில்லை என்று ஒரகடத்தில் கூறினார். எப்படி இவர்களின் தமிழர் காப்பு அக்கறை! இவர்தான் தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சர்!

அத்தோடு விட்டாரா கருப்பணன்? இல்லை. அடுத்து அவர் கூறியது, அதிர்ச்சி தருகிறது.

“எரிவளி எடுக்க எங்களிடம் வரும்போது, அனுமதிப்பதா, வேண்டாமா என்பது அரசின் கொள்கை முடிவைப் பொறுத்தது”.

இத்தனை நாட்களாக சசிகலா அரசு இதில் ஒரு முடிவெடுக்கவில்லை! மதில் மேல் பூனை போல் இருக்கிறது.

காவிரியில் கசிவு நீரும் தமிழ்நாட்டிற்கு வராமல் தடுக்க, மேக்கேதாட்டில் 66.5 ஆ.மி.க. கொள்ளளவில் பெரிய நீர்த்தேக்கம் கட்டுவோம் என்று திரும்பத் திரும்ப கர்நாடக முதல்வரும் அமைச்சர்களும் அறிவித்து வருகிறார்கள். அதற்கான திட்டச் செலவாக ரூ. 5,912 கோடி தொகையும் ஒதுக்கிவிட்டார்கள்.

இதற்கு எதிர்வினையாக, ஒரு கண்டன அறிக்கை - ஒரு மறுப்பறிக்கை அ.தி.மு.க. முதல்வரோ, அமைச்சர்களோ வெளியிடவில்லை. இதற்கு சசிகலா வழிகாட்டவில்லையா? அல்லது அவர்களின் ‘குலதெய்வம்’ செயலலிதா வழி காட்டவில்லையா?

கர்நாடக அணைகளிலிருந்து கசிந்து வரும் நீரையும் மேட்டூருக்கு மேற்கே கோவிந்தபாடி அருகே தமிழ்நாட்டிற்குரிய காவிரி எல்லைக்குள் பெரும்பெரும் மோட்டார் வைத்து உறிஞ்சி எடுத்துக் கொண்டுள்ளது கர்நாடக அரசு. தமிழ்நாடு அரசு இதைத் தடுக்கவில்லை!

இன்னும் சில நாட்களில் மேட்டூரிலிருந்து குடிநீருக்குத் தண்ணீர் திறந்துவிட முடியாத அபாயம் காத்திருக்கிறது. இதனாலும் வறட்சியாலும் வரும் மாதங்களில் தமிழ்நாடு குடிநீர் கிடைக்காமல் தவிக்கப் போகிறது. தண்ணீர் இன்றித் தவிக்கும் கால்நடைகளை அறுப்புக்கு அனுப்ப நேரிடும்; அல்லது அவை சாகும்!

நெருங்கி வரும் இந்த பேராபத்தை அரசு கட்டிலில் வீற்றிருக்கும் சசிகலா அமைச்சரவையும் கவனத்தில் கொள்ளவில்லை; ஆட்சியைக் களவாடத் துடிக்கும் மு.க. ஸ்டாலினும் கவனத்தில் கொள்ளவில்லை.

தமிழ்நாடு அரசின் ஞாயவிலைக் கடைகளில் கடந்த சில மாதங்களாக ஏற்கெனவே மலிவு விலையில் விற்கப்பட்ட பருப்பு, உளுந்து, பாமாயில் போன்ற பொருட்கள் விற்கப்படவில்லை. இந்திய அரசின் உணவுப் பொருள் வழங்கல் திட்டத்தை அ.தி.மு.க. அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. எதற்காக என்ற விவரம் சொல்லாமல் இந்திய அரசு வீடு வீடாகக் கணக்கெடுப்பு நடத்தி வருகிறது.

கூரைவீடா, கட்டட வீடா, மாடிகள் எத்தனை, குளிர்ப்பதனப் பெட்டி இருக்கிறதா, இருசக்கர வண்டி, நாற்சக்கர வண்டி, வருமானம் முதலியவற்றை எல்லாம் கணக்கெடுக்கிறார்கள். இந்திய அரசுக்காகத் தமிழ்நாடு அரசு ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் இக்கணக்கை எடுக்கிறார்கள்.

இக்கணக்கெடுப்பு முடிந்த பின் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 80 விழுக்காட்டு மக்களுக்கு ஞாயவிலைப் பொருள்கள் கிடைக்காது – இலவச அரிசியின் நிலையும் வினாக் குறியே!

ஞாயவிலைக் கடைகளை மூட வேண்டும் என்று உலக வங்கி, அமெரிக்க – ஐரோப்பிய பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவைத் தொடர்ந்து இந்திய அரசை வலியுறுத்தி வருகின்றன. பன்னாட்டு முதலாளிகளின் இந்தியாவின் தலைமை அமைச்சராக உள்ள நரேந்திர மோடியின் ஆட்சி வெளிநாட்டு வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டி வருகிறது.

வேளாண்மைக்கும் குடிநீருக்கும் பயன்படுத்தும் நீரை மீட்டர் வைத்து அளந்து விற்கும் முறையை மோடி அரசு கொண்டு வர உள்ளது. அதற்கான தேசிய நீர்க் கொள்கையை அது அறிவித்து விட்டது. இவற்றையெல்லாம் எதிர் கொண்டு தமிழ்நாட்டின் எட்டு கோடி மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் கட்சி எது?

அ.தி.மு.க.வோ, தி.மு.க.வோ அல்லது வேறு பெயரில் சின்ன தி.மு.க.க்களாகப் பவனி வரும் எதுவுமோ தமிழ் மக்களைப் பாதுகாக்கப் போராடப் போவதில்லை; ஈகம் செய்யப் போவதில்லை!

பதவி, பணம், விளம்பரம் மூன்றும்தான் இக்கட்சிகளின் உண்மையான இலக்கு!

எழுச்சி பெற்றுள்ள இளைஞர்களே, எதிர்வினையாற்றுவது தேவைதான்; ஆனால் அது மட்டும் மக்களைக் காக்காது! நேர்வினையாற்ற வாருங்கள்! மாற்றுத் திட்டங்களை முன்மொழியுங்கள்! மாற்று அரசியலை முன்மொழியுங்கள்!

பதவி – பணம் – விளம்பரம் மூன்றுக்கும் ஆசைப்படாத பண்பை அடிப்படை விதி ஆக்கிக் கொள்ளுங்கள்! ஒரு தலைமுறை உழைத்துப் புதிய தமிழ்த்தேசத்தைக் கட்டி எழுப்புவோம் என்று உறுதி ஏற்றுக் கொள்ளுங்கள்!

போலிகளைத் தோலுரியுங்கள். இப்பொழுது ஏற்பட்டுள்ள எழுச்சியைப் பயன்படுத்தித் தலைமையைக் கைப்பற்றி வேறு பெயரில் புதிய சந்தர்ப்பவாதத் தேர்தல் ஆதாயக் கட்சியை உருவாக்கிட முயலும் தன்னலவாதிகளுக்கு இடம் கொடாதீர்கள்!

தமிழினத் தற்காப்பு அரசியல் உண்மையானதாகப் புதிய வடிவெடுக்க வேண்டும். அந்தப் பாதை பற்றியும் சிந்தியுங்கள்; செயல்படுங்கள்!

இந்திய அரசின் மக்கள் விரோதத் திட்டங்களை – தமிழர் விரோதச் செயல்பாடுகளை எதிர்ப்பதுடன், தமிழ்நாட்டு அரசின் செயலற்ற தன்மையை எதிர்த்துப் போராட வேண்டும். நடுவண் அரசின் மக்கள் விரோதத் திட்டங்களை எதிர்த்து நாம் போராடும்போது, பார்வையாளராக வீற்றிருக்கும் தமிழ்நாடு அரசின் தமிழினத் துரோகத்தை எதிர்த்துப் போராட வேண்டும்.

கோயில் மாடுகளைப் போல் ஊர் மேயும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் தன்னல அரசியலை எதிர்த்து, சர்வாதிகாரத் தலைமைகளை எதிர்த்துப் போராட வேண்டும். மாற்றுத் திட்டங்களை முன்வைத்துப் போராட வேண்டும். •

**பெ. மணியரசன்**

“காவிரியின் பால் சுரக்கும் அமுதக் கிண்ணம்“ என்று பாவலர் தணிகைச்செல்வன் தஞ்சை மாவட்டத்தை ஒரு கவிதையில் பாராட்டியுள்ளார். “நெடுவாசல்“ என்ற ஊரைப் பார்த்த போது இந்த வரிதான் நினைவுக்கு வந்தது.

“நெடுவாசல்“ தமிழர் தற்காப்பு எழுச்சியின் மற்றுமொரு முகவரி! மற்றுமொரு மையம்! இந்தியாவுக்கே தெரிந்த பெயராயிற்று ‘நெடுவாசல்’!

நான் 23.02.2017 பிற்பகல், தோழர்களோடு நெடுவாசல் சென்றேன். தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமை செயற்குழு உறுப்பினர் நா. வைகறை, தஞ்சை இலெ. இராமசாமி, பட்டுக்கோட்டை இராசேந்திரன், நாடக வினோத் ஆகியோர் சென்றோம். அங்கு ஏற்கெனவே களப்பணியில் செயல்பட்டுக் கொண்டிருந்த புதுக்கோட்டை மிசா. மாரிமுத்து, செறுவாவிடுதி சரவணன், நெடுவாசல் பசுமை இராமநாதன் ஆகியோருடன் நாங்கள் இணைந்து கொண்டோம்.

காவிரியின் கிளை ஆறான புதாறு பாய்ந்து வளம் பெருக்கிய ஊர் நெடுவாசல்! அவ்வூர் மட்டுமல்ல, அவ்வூரைச் சுற்றியுள்ள பல ஊர்களும் பசுந்தோப்பு களுக்குள்தான் குடி கொண்டுள்ளன. ஆற்றுநீரை வன்னெஞ்சக் கன்னடர்கள் தடுத்தாலும் ஊற்றுநீர், நெடுவாசல் வட்டாரத்தை ஊட்டி வளர்க்கிறது!

அந்த ஊற்று நீரையும் நஞ்சாக்கிட இந்திய அரசு, எரிவளிக் (எரிவாயு) குழாய்களை மண்ணுக்குள் இறக்குகிறது. ஏற்கெனவே திருவாரூர் நாகை மாவட்டங்களில் பெட்ரோலியம் எடுப்பதற்கும் எரிவளி எடுப்பதற்கும் இந்திய அரசு இறக்கிய குழாய்கள் மண்ணைப் புண்ணாக்கி, நிலத்தடி நீரை நஞ்சாக்கி, விளை நிலங்களை வேதிப்பொருட்களின் களமாக்கி,

# மாறுவேடத்தில் வந்த மீத்தேன் திருடனை நெடுவாசல் மக்கள் பிடித்தனர்



வேளாண்மை, குடிநீர் அனைத்தையும் பாழாக்கி வாழ்வுரிமையை பறித்தன. அடுத்து மீத்தேன் எரிவளி எடுக்க அம்மாவட்டங்களில் கீழைப் பேராற்றல் கழகம் (Great Eastern Energy Corporation Limited - GEECL) என்ற தனியார் நிறுவனத்தை இந்திய அரசு களமிறக்கியது.

வேளாண் அறிவியலாளர் நம்மாழ்வார் அவர்கள் அந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு விளக்கம் கூறி, மீத்தேன் ஆழக்குழாய்களைப் பிடுங்கி எறியும் போராட்டத்தைத் தொடக்கி வைத்தார். அவரின் மறைவுக்குப் பிறகு மீத்தேன் எதிர்ப்புப் போராட்ட அமைப்புகள் பல உருவாகி மக்களை எழுச்சி பெறச் செய்து மீத்தேன் தடுப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. மாபெரும் மக்கள் எழுச்சியின் முன் மீத்தேன் நச்சுக்குழாய் பதிப்பை தொடர முடியவில்லை. கீழைப் பேராற்றல் கழகம் அலுவலகத்தைக் காலிசெய்துவிட்டு காவிரி மண்டலத்தை விட்டு வெளியேறியது. மீத்தேன் எடுப்புத் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளதாக இந்திய அரசு அறிவித்தது.

ஆனால் இப்போது “ஹைட்ரோ கார்பன்“ எடுக்கும் திட்டம் என்று சொல்லிக் கொண்டு நெடுவாசல் பகுதியில் இந்திய அரசின் எண்ணெய் இயற்கை எரி வளிக் கழகம் (ஓ.என்.ஜி.சி) குழாய்கள் பதிக்க வந்தது.

பக்கத்து மாவட்டங்களில் மண்ணைப் புண்ணாக்கி வாழ்வுரிமை பறித்த திட்டம்தான் இங்கு வேறு பெயரில் வருகிறது என்பதைப் புரிந்து கொண்ட நெடுவாசல் பகுதி மக்கள் அத்திட்டத்தை எதிர்த்து வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்ட மாணவர்கள் இளைஞர்கள், பொது மக்கள் அனைவரும் “எண்ணை எரிவளிக் கழகமே வெளியேறு, எங்கள் மண்ணில் நச்சுக் குழாய்களை இறக்காதே“ என்று முழங்கி வருகின்றனர். நெடுவாசல் வந்த இந்திய அரசின் எண்ணெய் எரி வளிக் கழக அதிகாரிகளை மக்கள் சூழ்ந்து முற்றுகை இட்டனர். பின்னர் அவர்களை வெளியேற்றினர்.

நெடுவாசல், அதை ஒட்டிய கருக்காகுறிச்சி உள்ளிட்ட சுற்றுவட்ட ஊர்களில் பல இடங்களில் பல்லாயிரக்க ணக்கான அடி ஆழத்திற்குக் குழாய்கள் இறக்கி நச்சு எரிவளி எடுப்பது இந்திய அரசின் திட்டம்! இதை 15.02.2017 அன்று இந்தியப் பெட்ரோலியத் துறை அமைச்சர் தருமேந்திர பிரதான் அறிவித்தார்.

“மீத்தேன் எடுக்கவில்லை; ஹைட்ரோ கார்பன் எரிவளி எடுக்கிறோம்“ என்றார் அமைச்சர்.

நெடுவாசல் பகுதியைச் சேர்ந்த கல்வி கற்ற இளைஞர்கள் சென்னை உட்பட பல நகரங்களில் தொழில்நுட்பத்துறை உட்பட பல துறைகளில் பணியில் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஊரில்

**மீத்தேனின் உடன்பிறப்புகளில் ஒன்றைத்தான் எடுக்கத் திட்டமிட்டுள்ளார்கள். “மீத்தேன்” என்ற பெயர் ஏற்கெனவே அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டு, விரட்டப்பட்ட ஒரு திட்டம் என்பதால், மாறுவேடம் புனைந்து Hydro Carbon - ஐட்ரோ கார்பன் எடுக்கும் திட்டம் என்று இத்திட்டத்தை இந்திய அரசு அறிவித்தது. ஐட்ரோ கார்பன் (Hydro Carbon) என்பது மண்ணின் ஆழத்திற்குள் நீர்மமும் கரிமமும் கலந்து உருவாகக்கூடிய வேதிக்கலவைகளின் பொதுப் பெயர்!**






வேறு பெயரில் மீத்தேன் நச்சுக் குழாய்த் துளைகள் போடப் போகிறார்கள் என்பதை உணர்ந்து தங்கள் ஊர் மக்களை எச்சரித்தார்கள். சூழலியல் அமைப்பு களும் மீத்தேன் எதிர்ப்பு அமைப்புகளும் எச்சரித்தன.

நெடுவாசல் மக்கள் கொந்தளித்தனர். தமிழ்நாடெங் குமிருந்து தமிழர் மரபு காப்போர், சூழலியலார், தமிழ்த்தேசியர்கள், பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தோர், மாணவர்கள், இளைஞர்கள் - நச்சு எரிவளித் திட்டத்தை எதிர்த்து நெடுவாசலில் குவிந்த வண்ணமுள்ளனர்.

சங்ககாலத் தமிழர் சூழலியல் பார்வை, அறநெறி, தற்காப்பு வீர உணர்ச்சி ஆகியவை இக்காலத் தமிழர் வழியாக வெளிப்படுகின்றன. நம்மாழ்வார் தொடங்கி வைத்த மீத்தேன் எதிர்ப்பு, இயற்கை வேளாண்மைச் செயலாக்கம் எல்லாம் சங்ககாலத் தமிழர் வாழ்வியல் தொடர்ச்சிதான்!

சல்லிக்கட்டு உரிமை கோரிப் போராடிய மாண வர்கள், இளைஞர்கள் ஆண்களும் பெண்களும் எழுப் பிய “தமிழன்டா“ முழக்கமும் சங்ககாலத் தொடர்ச்சி தான்!

தமிழ்த்தேசியம் என்பது வெறும் இனவாதம் அன்று; சரியான மாற்று வாழ்வியல்!

### மாறுவேடத்தில் மாட்டிக் கொண்டார்

மீத்தேனின் உடன்பிறப்புகளில் ஒன்றைத்தான் எடுக்கத் திட்டமிட்டுள்ளார்கள். “மீத்தேன்“ என்ற பெயர் ஏற்கெனவே அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டு, விரட்டப்பட்ட ஒரு திட்டம் என்பதால், மாறுவேடம் புனைந்து Hydro Carbon - ஐட்ரோ கார்பன் எடுக்கும் திட்டம் என்று இத்திட்டத்தை இந்திய அரசு அறிவித்தது.

ஐட்ரோ கார்பன் (Hydro Carbon) என்பது மண் ணின் ஆழத்திற்குள் நீர்மமும் கரிமமும் கலந்து உருவாகக்கூடிய வேதிக்கலவைகளின் பொதுப் பெயர்!

பெட்ரோலியம் எடுப்பதற்காகவோ அல்லது இயற்கை எரிவளி (Natural Gas) எடுப்பதற்காகவோ பல்லாயிரம் அடிக்குக் கீழே குழாய் இறக்கும் போது, காற்று (வளி) வெளி வருகிறது. இவ்விரண்டின் கலவை விகிதத்தைப் பொறுத்து ஒவ்வொன்றும் ஒரு தனிப் பெயர் பெறுகிறது. மீத்தேன் என்பது $CH_4$ அதாவது 1 பங்கு கரிமமும் நான்கு பங்கு நீர்மமும் கொண்டது. $C_2H_6$ அதாவது இருபங்கு கரிமமும் ஆறுபங்கு நீர்மமும் சேர்ந்தால் அது ஈத்தேன் (Ethane). மீத்தேனின் உடன்பிறப்புகள்தான் ஈத்தேன், பென்டேன், புரோபேன், ஷேல் மீத்தேன், இயற்கை எரிவளி முதலியவை. இவற்றை எடுக்கும் முறை ஒன்றுதான்!

சிலவற்றை 500 அடி முதல் 5,000 அடிவரை குழாய் இறக்கி எடுப்பர். வேறு சிலவற்றை 5,000 முதல் 10,000 அடி வரை குழாய் இறக்கி எடுப்பர். நிலக்கரிப் படிவப் பாறைகளுக்கிடையே தங்கியுள்ள மீத்தேனை எடுக்கவும், வண்டல் பாறைகளுக்கிடையே தங்கியுள்ள ஷேல் மீத்தேனை எடுக்கவும், அல்லது வேறு வகை எரிவளியை எடுக்கவும் பயன்படும் தொழில்நுட்பம் ஒன்றே!

ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் நிலத்திற்குள் படுக்கை வசத்தில் குழாய்களை நீட்டி, 600க்கும் மேற் பட்ட வேதிப்பொருள்கள் கலந்த நீரை நீரியல் விரிசல் முறையில் செலுத்துவது என்பதுதான் அந்தத் தொழில்நுட்பம்!

அறுநூறு வகை வேதிப்பொருள்கள் கலந்த அந்த நஞ்சு நீர் நிலத்தடி நீரை நஞ்சாக்கும்; மேல்தளத்தில் நிலத்தை நஞ்சாக்கும்; அந்நிலத்தின் மீது ஓடிவரும் அல்லது பெய்யும் மழை நீரை நஞ்சாக்கும்.

இந்த பாதிப்பைத்தான் நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நரிமணம், அடியக்க மங்கலம், களப்பால், கடமங்குடி, புலிவலம், கருப்பூர் முதலிய பல ஊர்களில் இன்று பார்க்கிறோம்.

**நமக்குப் பெட்ரோலியம் எரிவளி எப்படிக் கிடைக்கும்?**

பெட்ரோலியம், எரிவளி (மீத்தேன்) முதலியவற்றை கடலிலும் பாலை நிலப் பகுதியிலும்தான் எடுக்க வேண்டும், வேளாண் நிலங்களில், காலம் காலமாக மக்கள் குடியிருக்கும் ஊர்களில் இவை கிடைத்தாலும் எடுக்கக் கூடாது.

கனிமங்களும், உலோகங்களும் மக்கள் வாழ்க்கையைச் செழுமைப்படுத்த மட்டும்தான் பயன்பட வேண்டும். மக்கள் வாழ்க்கையைப் பலியிட்டு, கனிமங்களை, உலோகங்களை எடுக்கக் கூடாது.

“சென்னை நகருக்குக் கீழே கோடிக்கணக்கான டன் அளவிற்குத் தங்கம் இருக்கிறது; பிளாட்டினம் இருக்கிறது'' என்று கண்டுபிடிக்கப்பட்டால், உடனே சென்னை நகரைக் காலி செய்து விட்டு, தங்கம், பிளாட்டினம் எடுக்கச் சுரங்கங்கள் தோண்டுவார்களா? மாட்டார்கள்! ஏன்? சென்னையில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய முதலாளிகள், பெரிய பெரிய அதிகாரிகள், பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், ஆட்சித்தலைவர்கள்,

பெரிய பெரிய நடிகர்கள் என முக்கியப் பெரும்புள்ளிகள் இருக் கிறார்கள். அவர்களுக்கு வேலை செய்ய ஆட்கள் தேவை. எனவே சென்னையைக் காலிச் செய்ய மாட்டார்கள்!

ஆனால் நெடுவாசல் போன்ற எத்தனை சிற்றூர்கள் அழிந்தாலும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பெருநிறுவனங்களின் முதலாளிகள் கவலைப்படுவதில்லை. ஆரியச் சாணக்கியன் தொடங்கி இன்றைய ஐரோப்பிய - அமெரிக்க ஏகபோக முதலாளியப் பொருளியல் வல்லுநர்கள் வரை “ஒரு நாட்டைக் காப்பாற்ற ஓர் ஆட்சியைக் காப்பாற்ற பல ஊர்களை, பல நகரங்களை அழிக்கலாம்“ என்ற கொள்கை உடையவர்கள்தாம்! அதை வெளிப்படையாகவே ஊடகங்களில் சொன்னார், பா.ச.க. தலைவர் இல. கணேசன்!

நமது தமிழ்த்தேசியமோ, சென்னை நகரத்தையும் அழிக்கக்கூடாது சிற்றூரரையும் அழிக்கக்கூடாது; அதற்கேற்ற வாழ்வியல் முறைகளை, தொழில் உற்பத்தி முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்கிறது!

நுகர்வு வெறியை இலாப வெறியை முற்றிலுமாகக் கைவிட வேண்டும். நுகர்வும், இலாபமும் ஒரு வரம்புக்குள் இருக்க வேண்டும்.

**வளர்ச்சித் திட்டங்களைத் தடுக்கலாமா?**

விளைநிலங்களில் பெட்ரோலியம் எடுப்பது, எரிவளி எடுப்பது எல்லாம் வளர்ச்சித் திட்டங்கள் அல்லவா? அவற்றைத் தடுக்கலாமா? என்று ஆட்சியாளர்கள் வினா எழுப்புகிறார்கள்.

நெடுவாசல் அதை ஒட்டியுள்ள கருக்காக்குறிச்சி ஆகிய இரு ஊர்களுக்குள்ளும் சென்று சுற்றிப் பார்த்தோம். மக்களிடம் பேசினோம்.

இந்தப் பகுதி மிக மிக வளமான பகுதி; இயற்கை தன் செல்வத்தை வாரி வழங்கும் பகுதி. இங்கிருந்து பலாப்பழம், மாம்பழம், தேங்காய், எலுமிச்சை, பூக்கள் என ஏராளமாக ஏற்றுமதி ஆகின்றன. அத்தனை




**“சல்லிக்கட்டு உரிமை கோரிப் போராடிய மாணவர்கள், இளைஞர்கள் - ஆண்களும் பெண்களும் எழுப் பிய “தமிழன்டா” முழக்கமும் சங்ககாலத் தொடர்ச்சி தான்! தமிழ்த்தேசியம் என்பது வெறும் இனவாதம் அன்று; சரியான மாற்று வாழ்வியல்!”**

மரங்களும், செடி கொடிகளும் தழைத்துக் கிடக்கின்றன.

இங்குள்ள பசுமை இராமநாதன் தோப்பைப் பார்த்தோம். அதில் இலட்சக்கணக்கான மரங்கள் இருக்கின்றன. சந்தனமரம், செம்மரம், தேக்கு, பர்மாத் தேக்கு, சீனாத் தேக்கு, ஆப்பிரிக்கா தேக்கு, குமிழ்த் தேக்கு, ரோஸ் உட், வேங்கை இன்னும் இன்னும் பல்வேறு வகை அரிய மரங்கள், விலை மிதிப்பு மிக்க மரங்கள் இருக்கின்றன; ஒரு மரம் இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விலை போகக் கூடிய தரங்களும் இருக்கின்றன, அம்மரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

இவை மட்டுமல்ல நெல், நிலக்கடலை எனப் பல பயிர்கள் சாகுபடியாகின்றன. நிலத்தடி நீர் நிறைய இருக்கிறது. ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்தேன் அவ்வளவு தெளிவான, குளிரான, தூய நீர்!

இவையெல்லாம் இவ்வூர்களின் மக்களை வாழ வைக்கின்றன. வெளியூர்களில் வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கும் பயன்படுகின்றன.

இவற்றை மேலும் வளர்த்து, விரிவுப்படுத்துவது வளர்ச்சித் திட்டமா? இவற்றை அழித்து, பெங்களூர்ப் பணமுதலை மல்லிகார்ச்சுனப்பா நிறுவனமான "ஜெம்" நிறுவனம் கொழுக்க, நச்சு நீர் உற்பத்தி செய்யும் ஐட்ரோ கார்பன் எடுக்க அனுமதிப்பது வளர்ச்சித் திட்டமா?

ஜே.எம். மல்லிகார்ச்சுனப்பா சித்தேசுவரா, பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருமுறை இருந்தவர். 2009 - 2010 ஆண்டுகளில் கர்நாடக மாநில பா.ச.க துணைத் தலைவராக இருந்தவர். 2004லிருந்து 2014ஆம் ஆண்டுவரை, இவர் தான் பா.ச.க. நாடாளுமன்றக் குழுவின் பொருளாளர்! பா.ச.க.வின் பணச்சுரங்கம்! 2016 - சூலையில் இவர் இறந்துவிட்டாலும், இவரது "ஜெம்" நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

தற்போது நெடுவாசலில் கொண்டுவரப்படவுள்ள ஐட்ரோ கார்பன் திட்டத்திற்காக நெடுவாசலில் 4,000 அடிக்குத் துளையிட்டு சோதனை நடத்த, கடந்த 2009ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது காங்கிரசு - தி.மு.க. கூட்டணி ஆட்சி! காங்கிரசு முன்வைத்த அத்திட்டத்தையே தற்போது பா.ச.க. செயல்படுத்தத் துடிக்கிறது.

இந்திய அரசில், காங்கிரசுக் கூட்டணி ஆண்ட போதும், இப்போது பா.ச.க. கூட்டணி ஆளுகின்ற போதும் அதன் ஒரே "வளர்ச்சிக் கொள்கை" ஏகபோக முதலாளிகளின் பெரு நிறுவனங்கள் கொழுக்க, வேளாண்மையைப் பலியிட்டு, உழவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றும் திட்டம்தான்!

சப்பான் நாட்டில் இரும்பு கிடைக்கவில்லை. வெளிநாட்டில் இரும்பு வாங்கித்தான் தொழில் வளர்ச்சி கண்டார்கள். நமக்குப் பெட்ரோலியம், எரிவளி எடுப்பது மக்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் என்றால் நம்நாட்டில் கிடைக்கும் வேறு வளங்களைப் பயன்படுத்தி தேவையானவற்றை வெளிநாடுகளில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

நெடுவாசல் மட்டுமல்ல, விளைநிலங்களில் எங்கு நச்சுக் குழாய் இறக்கினாலும் தடுப்போம், விரட்டியடிப்போம்!

## தோழர் அ.ஆனந்தன் அன்னையார் படத்திறப்பு



தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் பொருளாளர் தோழர் அ. ஆனந்தன் அவர்களின் தாயார் திருவாட்டி. மெட்டில்டா அவர்கள், கடந்த 09.01.2017 காலை உடல் நலக்குறைவு காரணமாக, கோவையிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார். அம்மையாரது இரு கண்களும் மருத்துவமனைக்குக் கொடையளிக்கப்பட்டது.

திருவாட்டி. மெட்டில்டா அவர்களின் படத்திறப்பு நிகழ்வு, கோவை – சிங்காநல்லூர், ஏ.டி.எம். அரங்கில் 18.02.2017 அன்று நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் அவர்கள் அம்மையாரது படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். முன்னதாக, தோழர் அ. ஆனந்தன் தொடக்கவுரையாற்றினார். பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கோ. மாரிமுத்து நெறிப்படுத்தினார்.

பின்னர், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர் குழ. பால்ராசு, தோழர் இரெ. இராசு, வழக்குரைஞர் நிக்கோலஸ், மாற்று மருத்துவர் கிளாடியஸ், திரு. இலாரன்சு, அருள்திரு. வில்லியம் சோசப், திரு. பாலு உள்ளிட்டோர் அம்மாவுடனான தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். நிறைவில், திருவாட்டி. மெட்டில்டா அவர்களின் மருமகளும், மகளிர் ஆயம் நடுவண் குழு உறுப்பினருமான தோழர் இளமதி நன்றி கூறினார்.

நிகழ்வில், பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள் பழ. இராசேந்திரன், க. விடுதலைச்சுடர், க. அருணபாரதி, தஞ்சை மாநகரச் செயலாளர் தோழர் இல. இராமசாமி, திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன், கோவை மாநகர்ச் செயலாளர் தோழர் விளவை இராசேந்திரன், தோழர்கள் திருவள்ளுவன், ஸ்டீபன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# காவிரித்தாய்க் காப்பு முற்றுகை

## தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடர் போராட்டம் காவிரி உரிமை மீட்புக் குழு களம் இறங்குகிறது.

கடந்த 23.02.2017 அன்று, தஞ்சையில் காவிரி உரிமை மீட்புக் குழுக் கூட்டம், ஒருங்கிணைப்பாளர் திரு. பெ. மணியரசன் தலைமையில் நடைபெற்றது. தமிழர் தேசிய முன்னணி பொதுச் செயலாளர் திரு. அய்யனாபுரம் சி. முருகேசன், தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. த. மணிமொழியன், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் இலரா. பாரதிச்செல்வன், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, இந்திய சனநாயகக் கட்சித் தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. சிமியோன் சேவியர்ராசு, மனித நேய மக்கள் கட்சி வணிகப் பிரிவு தமிழ்நாடு செயலாளர் திரு. ஜெ. கலந்தர், விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி மாநில அமைப்புச் செயலாளர் திரு. அருண் மாசிலாமணி, மனித நேய சனநாயகக் கட்சி தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. அகமது கபீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காவிரியின் குறுக்கே மேக்கேத்தாட்டில் கர்நாடகம் அணை கட்டுவதைத் தடுத்தல், காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், முழுமையான வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்தல், காவிரிச் சமவெளியை பாது காக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தல் ஆகிய மிக மிக இன்றியமையாக் கடமைகளில் தமிழ் நாடு அரசு செயலற்ற நிலையில் உள்ளது.

எனவே தமிழ்நாடு அரசு விரைந்து செயல்பட வலியுறுத்தி, தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவல கத்தில், தொடர் முற்றுகைப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அது பற்றிய தீர்மானம் வருமாறு :

**தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச் சாமி அவர்கள் 21.2.2017 அன்று அறிவித்த வறட்சி நிவாரண நிதி உதவிகள் மிகவும் குறைவானவை. சூடேறிய பாத்திரத்தில் சில நீர்த்துளிகளைத் தெளித்தால் அவை உடனே ஆவியாகி விடுவதைப் போல் இந்த நிவாரணத் தொகை உழவர்களின் துயர் துடைக்கப் போவதில்லை.**

**இந்திய அரசு தர வேண்டிய நிதி உதவியைப் பெறு வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பு உரிய அழுத்தம் தரவில்லை. இந்திய அரசு அதிகாரிகள் கள ஆய்வு செய்துவிட்டு, கடமை முடிந்தது என்று தமிழ்நாட் டைக் கைவிட்டு விட்டார்களோ என்ற கேள்வி எழுந் துள்ளது.**

**வறட்சியால் தமிழ்நாட்டுச் சாகுபடி பாதிப்பு என்று புள்ளி விவரம் தந்த முதலமைச்சர், கர்நாடகம் தமிழ்**



நாட்டிற்குரிய காவிரி நீரைத் திறந்துவிடாமல் அபகரித்துக் கொண்டதால் காவிரிப் பாசனப் பகுதியில் செயற்கை யான வறட்சி உண்டாக்கப்பட்டதைப் பற்றி வாய் திறக்க மறுத்தது ஏன்?

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட இருந்த நிலையில், அதைத் தடுத்துவிட்ட நடுவண் அரசு, இதுவரை காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவில்லை. இந்த அநீதியால், காவிரிப் பாசன மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டு, சாகுபடி அழிந்தது பற்றி முதல்வர் அறிக்கையில் குறிப்பிடாதது பெரும் ஏமாற்றமாக உள்ளது.

கடந்த காலங்களில் காவிரி உரிமை மீட்பில் முழு அக்கறை செலுத்தாமல், இந்தியத் தலைமை அமைச்ச ருக்குக் கடிதம் எழுதுவது, உச்ச நீதிமன்றத்தில் மனுப் போடுவது என்ற அளவில் தமிழ்நாடு அரசு தனது செயல்பாட்டைக் குறுக்கிக் கொண்டதால் – அரசியல் அழுத்தம் தர எந்த முயற்சியும் எடுக்காததால் – காவிரி உரிமைச் சிக்கலில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கூட செயல்படுத்திக் கொள்ள முடியாத அவலம் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டது.

இதனால் துணிச்சல் பெற்ற கர்நாடகம் இப்போது 5,912 கோடி ரூபாயில் மேக்கேதாட்டில் காவிரியின் குறுக்கே 66.50 ஆ.மி.க. (TMC) கொள்ளளவில் புதிய அணை கட்டும் வேலையில் இறங்கிவிட்டது.

தமிழ்நாடு அரசு தற்காப்பு உணர்ச்சியற்று இருக்கிறது; தற்காப்பு அக்கறையற்று இருக்கிறது; தற்காப்பு ஆற்ற லற்று இருக்கிறது. தமிழ்நாடு அரசின் இந்தச் செயலின் மையைக் கண்டு கொண்ட கேரளம் பவானி ஆற்றில் ஆறு இடங்களில் தடுப்பணைகள் கட்டுகிறது. ஆந்திர அரசு மேலும் புதிதாகப் பாலாற்றில் இப்போது தடுப்பணை கட்டுகிறது.

தமிழ்நாட்டு உரிமைகளையும் வாழ்வாதாரங்க ளையும் காக்கும் ஆற்றலும் அக்கறையும் அற்ற தமிழ் நாடு அரசைக் கண்டிப்பதுடன் அதனை விரைந்து செயல்பட வலியுறுத்தியும், தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் இந்திய அரசைக் கண்டித்தும் தொடர் முற்றுகைப் போராட்டம் நடைபெறும்.

### கோரிக்கைகள்

1. தமிழ்நாடு அரசே, இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, கர்நாடகம் மேக்கேதாட்டு அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்து!

2. காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட இந்திய அரசுக்கு நெருக்குதல் கொடு!

3. இந்திய அரசிடம், வறட்சி நிவாரண சிறப்பு நிதி பெற்று சாகுபடி இழந்த உழவர்களுக்கு 1 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கு. உழவுத் தொழிலாளர்களுக்கு 1 குடும்பத்திற்கு ரூபாய் 25 ஆயிரம் உதவித்தொகை வழங்கு. மக்களுக்குக் குடிநீர் கிடைக்க உறுதி செய்!

அனைத்துக் கால்நடைகளுக்கும் தீவனமும் குடிநீரும் கிடைக்க ஏற்பாடு செய்!

4. சாகுபடி அழிந்ததைக் கண்டு உயிரிழந்த உழவர்கள் அனைவரின் குடும்பத்திற்கும் தலா 15 இலட்ச ரூபாய் இழப்பீடு வழங்கு!

5. இந்திய அரசு வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் உழவர்கள் பெற்ற கடன் அனைத்தையும் எந்த வரம்புமின்றித் தள்ளுபடி செய்!

6. தனியார் கடன் வசூலை ஓராண்டிற்குத் தள்ளி வை!

7. காவிரிச் சமவெளியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திடு! காவிரிச் சமவெளியில் மீத்தேன், எரிவளி, பெட்ரோலியம், நிலக்கரி உள்ளிட்ட எந்தக் கனிம வளமும் எடுப்பதற்குத் தடை போடு! அரசு அனுமதியுடனும் அனுமதி இன்றியும் முற்றிலுமாக மணற்கொள்ளையைத் தடுத்து நிறுத்து!

●

## புலவர் கி.த.ப. அவர்களுக்கு விருது!



தமிழ் மாமுனிவர் மங்கலம்கிழார் கல்வி அறக் கட்டளை சார்பாக, கடந்த 05.02.2017 அன்று திருத்தணிகையில் நடைபெற்ற பாவலர் வெண் முகிலனார் அவர்களின் முத்துவிழாவில், புலவர் கி.த. பச்சையப்பனார் அவர்களின் தமிழ்த்தொண்டைப் பாராட்டி அவருக்கு, “தொல்காப்பியர் விருது” வழங்கிச் சிறப்பித்தனர். மாணவர் மன்றத் தலைவர் பெரும் புலவர் திரு. ப.கி. காஞ்சி பொன்னுசாமி அவர்கள் விருதை புலவர் கி.த.ப. அவர்களுக்கு வழங்கினார்.

புலவர் கி.த.ப. அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த வாழ்த்துகள்! விருது வழங்கிய மங்கலங்கிழார் அறக் கட்டளைக்குப் பாராட்டுகள்!

# ஒப்பந்தத் தொழிலாளர் அவலத்தில்

## அரசு - நீதித்துறை - தொழிற்சங்கப் பங்கு




**1970க்கு முந்தைய நிலை**

1970க்கு முன்னர், அத்திபூத்தாற் போல சில நிறுவ னங்கள் சில பணிகளில் மட்டும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையைப் புகுத்தின.

இதை அந்நிறுவன நிரந்தர தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் போராடித் தடுத்து நிறுத்தின. சில இடங்களில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர் முறையை இரத்து செய்யக்கோரி, நிறுவனத்தின் நிரந்தர தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மூலமாக நீதிமன்றத்தை அணுகினர். அந்த வழக்குகளை விசாரித்த, தொழிலாளர் நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள், ஒப்பந்த தொழிலாளர் முறையில் தொழிலாளர்கள் அதிகமான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர் என்று கூறின; ஒப்பந்தத் தொழிலாளர் முறை தொழிலாளர் நலன்களுக்கு எதிரானது என்றன. ஒப்பந்த தொழிலாளர் முறையை இரத்து செய்தன.



**து.அரிபரந்தாமன்**
சென்னை உயர் நீதிமன்ற மேனாள் நீதிபதி

**இந்திய அரசு முதலாளிகளின் அழுத்தத்திற்கு பணிந்தது**

இந்நிலையில், முதலாளிகள் பேரழுத்தம் கொடுத்ததன் விளைவாக, 1970இல் பாராளுமன்றம், “ஒப்பந்தத் தொழிலாளர் முறையை முறைப்படுத்தல் மற்றும் ஒழித்தல் சட்டம்” கொண்டு வந்தது.

இச்சட்டம், நிரந்தரத் தொழிலாளர்கள் பணிபுரிந்த இடங்களில் ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை முதலாளிகள் அமர்த்தித் தொழில் செய்வதை சட்டப் படியானதாக ஏற்றது.

இந்திய அரசின் தொழில் நிறுவனங்கள், மாநில அரசின் தொழில் நிறுவனங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக ஒப்பந்தத் தொழிலாளர் முறை கொண்டு வரப்பட்டது.

இப்படித்தான் தொழிலாளர்களுக்கிடையே புதிய முறையில் தொழில் வருணாசிரமம் கொண்டு வரப் பட்டது. நிரந்தரத் தொழிலாளர்களுக்கான உணவகம் (கேன்டீன்), ஓய்வறை, மருத்துவமனை, குடியிருப்பு, நிர்வாகத்தின் வாகனத்தில் பயணித்தல் உட்பட எதிலும் ஒப்பந்த தொழிலாளர்களை அனுமதிப்ப தில்லை. அதாவது, நவீனத் தீண்டாமை கடைபிடிக்கப் படுகிறது.

முதலாளிகள் மின்கட்டணம், கச்சா பொருளுக்கான செலவு, உற்பத்தி வரி போன்ற மற்ற வரிகள் ஆகிய வற்றில் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, தொழி லாளர்களுக்கு எவ்வளவு குறைந்த கூலி கொடுக்க முடியுமோ, அப்படி கொடுத்து மிகுந்த இலாபம் அடைவதே அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழி! இன்று ஒப்பந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகுதியாக வும், நிறுவனங்களின் நேரடித் தொழிலாளர் எண் ணிக்கை குறைவாகவும் உள்ள நிலை ஏற்பட் டுள்ளது. சில நிறுவனங்களில், அனைத்துத் தொழிலா ளர்களுமே ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்ற மோச மான நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு நிறுவனத்தில் பெரும் அளவில் ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரியும் நிலையை நேரடி நிரந்தரத் தொழிலாளர்கள் அனுமதித்ததன் விளைவாக அந்த நேரடித் தொழிலாளர்களின் உரிமைப் பேச்சு, ஊதியப்பேச்சு நடத்தும் ஆற்றல் மிகவும் குறைந்து விட்டது. நேரடி தொழிலாளர்களிலும் நாட்கூலி, காசுவல், டெம்ப்ரரி, பதிலி, பயிற்சியாளர் எனப் பிரித்து குறைந்த கூலி அளித்து முதலாளிகள் கொள்ளை இலாபம் பெறுகின்றனர். இந்தத் தொழிலாளர்களைத் தொழிற் சங்கத்தில் சேர்ப்பது இல்லை. தொழிற் சங்கத்தில் சேர்ந்தால், இவர்களின் வேலை காலியாகி விடும். எனவே சமவேலைக்கு சம ஊதியம், 480 நாள் பணி முடித்தால் நிரந்தரம் என்று சட்டம் கூறினாலும், சம ஊதியமும் நிரந்தரமும், நேரடி தொழிலாளர்களுக்கு எட்டாக்கனியாக நடை முறையில் உள்ளது.

**ஒப்பந்த முறையை தடுக்கும் அதிகாரம் அரசுக்கே**

மேற்சொன்ன 1970 ஆம் ஆண்டு சட்டப்படி, ஒரு நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை தடை செய்வது பற்றிய முடிவை சம்பந்தப்பட்ட அரசாங்கம் தான் - இந்திய அரசோ, மாநில அரசோ எடுக்க வேண்டும். நீதிமன்றங்களுக்கு இதற்கான அதிகாரம் இல்லை என்கிறது இந்தச் சட்டம்.

**ஒப்பந்த முறைக்கு ஆதரவாக மாறிய உச்சநீதிமன்றம்**

தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறையின் கட்டுப் பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் துப்பரவு மற்றும் கழிவறை துப்புரவு செய்யும் பணிகளில் ஒப்பந்த தொழிலாளர்களைப் பணியமர்த்தக்கூடாது என்று தமிழ்நாடு அரசு போட்ட உத்தரவினை உச்ச நீதி மன்றம் 2001இல் இரத்து செய்தது.

ஒப்பந்தத் தொழிலாளர் முறை, தொழிலாளர்களை மிகவும் சுரண்டும் முறை என்று முன்னர் கூறிய உச்ச நீதிமன்றத்தின் போக்கில் இது ஒரு பின்னடைவு!

1970 ஆம் ஆண்டு சட்டத்திற்குப்பின், உச்ச நீதி மன்றத்தின் நிலைபாடு மாறிவிட்டது. ஒப்பந்தத் தொழி லாளர் முறையை ஒரு குறிப்பிட்ட பணியில் அரசு ஒழித்து ஆணை போட்டாலும், அந்த ஆணையை இரத்து செய்து, ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஊக்குவிக்கும் நிலைக்கு உச்ச நீதிமன்றம் வந்தது.

**தமிழ்நாடுஅரசு ஒப்பந்த முறையை ஊக்குவிக்கிறது**

இன்றைய தேதியில், சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில், சிமெண்டைப் பைகளில் நிரப்பும் பணியிலும், அப்பைகளை அச்சிடும் பணியிலும் ஒப் பந்தத் தொழிலாளர்களை பணிக்கு நியமிக்கத் தடை விதித்து அளித்த ஆணையைத் தவிர வேறெந்த நிறுவனத்திலும் ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு தமிழ்நாடு அரசு தடை விதிக்கவில்லை.

அதாவது, சிமெண்ட் தொழிற்சாலையில் மேற் சொன்ன பணிகளைத் தவிர, தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறையின் கீழ் வரும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும், ஒப்பந்த முறையில் தொழிலா ளர்களை அமர்த்திக் கொள்ளை இலாபம் பெற சட்டப் படி தடை ஏதும் இல்லை. எனவே இன்று இந்த சட்ட நிலையைப் பயன்படுத்தி அதாவது 1970 ஆம் ஆண்டின் சட்டத்தைப் பயன்படுத்தி - நிறுவனங்கள் அனைத்துப் பணிகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை அமர்த்திக் கின்றன. இச்சட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசிற்குள்ள அதி காரத்தைப் பயன்படுத்தி, நிரந்தரமான பணிகளில் எந்த நிறுவனமும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையில் தொழிலாளர்களை பணிக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்று தடை விதித்து ஆணை ஏதும் பிறப் பிக்கவில்லை.

அப்படித் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தாலும் முதலாளிகள் அந்த ஆணையை எதிர்த்து உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் சென்றால், அந்த ஆணையை இந்த நீதிமன்றங்கள் இரத்து செய்ய மறுத்து உறுதி செய்யுமா என்பது ஐயமே!

**உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒப்பந்த முறையை உறுதி செய்வதில் முடிந்தது**

1976 ஆம் ஆண்டில் துப்புரவுப் பணி, தூய்மை செய்யும் பணி, காவலர் பணி ஆகிய பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களை இந்திய அரசின் தொழி லாளர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் தொழில் நிறுவனங்கள் பணி அமர்த்துதல் கூடாது என்ற ஆணையை இந்திய அரசு பிறப்பித்தது.

இதனால் பல தொழில் நிறுவனங்களில் ஒப்பந்த முறையில் தொழிலாளர்கள் இந்தப் பணிகளில் அமர்த் தப்படுவது தடுக்கப்பட்டது.

இந்த ஆணையையும் மீறி, ஒப்பந்தத் தொழிலாளர் களை அமர்த்தும் நிறுவனங்களை எதிர்த்துப் போராடு வதன் மூலமும், நீதிமன்றம் செல்வதன் மூலமும், ஒப்பந்தத் தொழிலாளர் முறையை இப்பணிகளில் புகுத்துவதை தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் தடுத்து நிறுத்தின.

ஆனால், ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா (Steel Authority of India) நிறுவனம் தொடுத்த வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வு, 2001 ஆம் ஆண்டில் மேற்சொன்ன 1976 ஆம் ஆண்டு நடுவண் அரசு பிறப்பித்த ஆணையை 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இரத்து செய்ததின் விளைவாக, மேற்சொன்ன பணிகளில் மட்டுமன்றி, நேரடி உற்பத்திப் பிரிவுகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிறுவனங்கள் பயன்படுத்தும் ஒரு மோசமான சூழலை உண்டாக்கிவிட்டது. நடுவண் அரசின் தொழிலாளர் துறையின் கீழ் உள்ள சுரங்கங்களிலும் இன்னும் சில நிறுவனங்களிலும் சில பணிகளில் ஒப்பந்த தொழிலாளர் முறையை ஒழித்து ஆணைகள் போட்டிருப்பினும், மேற்சொன்ன தீர்ப்பிற்குப்பின் எல்லாப் பணிகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பது என்பதே நடைமுறையாகிவிட்டது.

இன்று அரசு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் வேறுபாடின்றி அனைத்து பணிகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை மிக மிகக் குறைந்த கூலிக்கு வேலை வாங்குகின்றன. இவர்களுக்கு விடுப்புக்கான உரிமை கிடையாது. அகவிலைப்படி என்றால் என்ன என்று இவர்கள் கேட்பர். நிரந்தரத் தொழிலாளர்களுக்கு 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்பளத்தில் உயர்வு இருக்கும் வகையில் தொழிற் சங்கங்கள் ஒப்பந்தம் போடும் நிலையை இவர்கள் அறியமாட்டார்கள். இவர் களுக்குப் போனஸ் உறுதி கிடையாது. ஓய்வு பெற்றால், பணிக்கொடை கிடைப்பதற்கும் உறுதி இல்லை. அதே போல, வருங்கால சேம நல நிதியில் இந்தத் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் ஒப்பந்ததாரர்கள் நிர்வாகப் பங்கையும், இத்தொழிலாளர் பங்கையும் செலுத்துகின்றனரா என்பதும் ஒரு கேள்விக்குறியே!

ஒப்பந்தத் தொழிலாளர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியே! அண்மையில் எண்ணூர் காமராஜ் துறைமுகத்தில் கப்பல்கள் மோதி எண்ணெய் படலம் உண்டான விபத்தே இதற்குச் சான்று. துறைமுக எல்லைக்குள் கப்பல் நுழைந்தவுடன், அதன் இயக்கம் முதல் அனைத்து பணிகளும் துறைமுக நிர்வாகத்தால் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மூலம் செய்யப்படுகிறது.

அங்கு இங்கெனாதபடி இறைவன் இருக்கிறானோ இல்லையோ, ஒப்பந்தத் தொழிலாளர்கள் இல்லாத இடமில்லை. இன்று ஒப்பந்தத் தொழிலாளர் முறை, கட்டுப்படுத்த முடியாத அளவில், சுரண்டல் வேட்டைக்கான முறையாக மாறிவிட்டது. நடுவண், மாநில அரசுகளின் முழு உதவியுடன் இந்த சுரண்டல் வேட்டை தொடர்கிறது. அரசும், நீதிமன்ற ம் தொழிலாளர்களைக் காக்கும் நிறுவனங்களாக இல்லாமல், வேலியே பயிரை மேய்ந்த கதைதான் நடைபெறுகிறது.

**எனது அனுபவங்கள்**

இந்திய அரசின், தொலைத்தொடர்பு நிறுவனம் எனது வீட்டிற்கு அண்மையில் தொலைப்பேசி இணைப்பு அளித்தது. அந்த வேலையைச் செய்த தொழில் நுட்பப் பணியாளர், அரசின் தொலைப்பேசி நிறுவன ஊழியர் அல்லர். அவர் ஒரு ஒப்பந்தத் தொழிலாளி. நான் ஓய்வு பெறுவதற்கு முன் ஒரு வழக்கு என் முன் விசாரணைக்கு வந்தது. சென்னை மாநகராட்சி, ஒப்பந்த முறையில் பல் மருத்துவரை ஒப்பந்தத் தொழி லாளியாக அமர்த்தியது. அதற்கு நான் தடை விதித்தேன். பின்னர் என்ன நிகழ்ந்தது என்று தெரியாது.

ஒரு நகராட்சியில், துப்புரவுப் பணியை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ஒப்பந்த முறையில் அளித்ததாக நகராட்சியும், நகராட்சியின் நேரடி தொழிலாளர்கள் என்று துப்புரவு தொழிலாளர்களும் என் முன் வாதிட்டனர்.

அந்த மகளிர் தன் உதவிக்குழுக்களின் பெயர் - ரோஜா மலர், வாடாமல்லி. அந்தத் துப்புரவு பெண் தொழிலாளர்கள் - நகராட்சியின் நேரடித் தொழிலாளர்கள் என்று நான் இறுதித் தீர்ப்பு அளித் தேன். பின்னர் என்ன நிகழ்ந்தது என்று தெரியாது.

**மத்தியிலும் மாநிலத்திலும் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஒழிக்கப்போவதில்லை. அவர்கள் 1970 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் ஏதேனும் சில பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் அமர்த்தப்படுவதற்குத் தடை விதித்து ஆணை போட்டாலும், நீதிமன்றங்கள் அந்த ஆணைகளுக்கு உடனே தடை கொடுத்து விடும் வாய்ப்பு உள்ளது.**

**எனவே, 1970 ஆம் ஆண்டு சட்டத்தையே இரத்து செய்ய வேண்டும் என்றும், நிரந்தர வேலைகள் எதிலும் ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை பணி அமர்த்தம் செய்யக் கூடாது என்றும் கோரும் ஒரு மாபெரும் இயக்கமே இன்றயை தேவை.**

## பன்னாட்டு நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்கள்

பன்னாட்டு நிறுவனங்களில் தொழிற்சங்கம் செயல்படவே அனுமதிப்பது கிடையாது. எந்தச் சட்டமும் இவர்களைத் தீண்டாது. தொழிலாளர் நலத்துறை இந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும்.

பன்னாட்டு நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களே பெருமளவில் பணிபுரிகின்றனர். எடுத்துக் காட்டாக, சென்னைக்கு அருகில் உள்ள ஹூண்டாய் (Hyundai) கார் கம்பெனியில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் பற்றிய விவரத்தைக் கீழே தருகிறேன். பன்னாட்டு முதலாளிகள் எப்படிக் குறைந்த கூலி கொடுத்துக் கொள்ளை லாபம் ஈட்டுகின்றனர் என்பதை இது தெளிவாக்கும்.

## இந்து ஏட்டின் இரு கட்டுரைகள்

இந்து நாளிதழில் திரு. சம்பத் என்பவர் எழுதிய கட்டுரையில், அரியானாவில் உள்ள பன்னாட்டு நிறுவனமான மாருதி கார் கம்பெனியில் மார்ச் 2012 இல் ஒரு தொழிற்சங்கம் தொடங்கப்பட்டது என்றும், இதனை ஒட்டி நிறுவனத்தின் 546 நேரடித் தொழிலாளர்களையும், 1,800 ஒப்பந்தத் தொழிலாளர் களையும் இந்த நிறுவனம் வேலை நீக்கம் செய்தது என்றும், இச்சூழலில் ஒரு தொழில் தகராறில் அந்நிறுவனத்தின் ஒரு மேலாளர் இறக்கவும், 40 அதிகாரிகள் காயமடையவுமான வன்முறை நிகழ்ச்சி 2012 சூலையில் நடந்தது என்றும், அதில் 147 தொழிலாளர்களைக் குற்றவாளிகளாகக் காண்பித்து அரியானா அரசு அத்தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்றும், அதில் 113 தொழிலாளர்கள் இரண்டு ஆண்டு சிறைவாசத்திற்குப் பின் பிணையில் வந்தார்கள் என்றும், மற்ற 34 தொழிலாளர்களுக்கு இதுவரை பிணை கிடைக்காமல் சிறையில் இருக்கின் றனர் என்றும் கூறியுள்ளார்.

இந்தக் குற்ற வழக்கை நடத்துவதற்காக திரு. துள்சி என்ற பிரபல வழக்குரைஞரை, தனது சிறப்பு வழக்குரைஞராக அரியானா அரசு ரூபாய் 5.5 கோடி செலவில் அமர்த்தியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். திரு. சம்பத் அவர்கள் மற்றொரு கட்டுரையில், ஹோண்டா மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் (Honda Motor Cycles and Scooters) தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனத்தில் உள்ள 3000 தொழிலாளர் களில், 466 தொழிலாளர்கள் மட்டுமே நிரந்தர தொழிலாளர்கள் என்றும், மற்றவர்கள் மிகக் குறைந்த கூலிக்குப் பணியில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என்றும் பதிவு செய்துள்ளார்.

## ஒப்பந்தத் தொழிலாளர்களைப் புறக்கணிக்கும் தொழிற்சங்க இயக்கம்

நான் வழக்குரைஞராக இருந்தபொழுது, நிரந்தரத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கும் இடதுசாரி கருத்துடைய தொழிற்சங்கங்களே அதே நிறுவனத்தில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்காக வீதிக்கு வந்து போராடவும் இல்லை, சட்ட வழியாகவும் போராடவில்லை என்ற வருத்தமான நிலையை பதிவு செய்ய விரும்புகிறேன்.

பெஸ்ட் & கிராம்டன் ஒப்பந்தத் தொழிலாளர் களும், இந்தியன் ஆயில் ஒப்பந்தத் தொழி லாளர்களும், காகித ஆலை ஒப்பந்தத் தொழிலாளர் களும் நடத்திய சட்ட போராட்டத்தையே நான் இங்கு குறிப்பிடுகிறேன். இதற்கு நிரந்தரத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் எந்த ஆதரவும் தரவில்லை என் பதே உண்மை. அப்படியெனில், மற்ற தொழிற்சங்கங் களைப் பற்றிக் கூறுவதற்கு ஏதும் இல்லை.

அண்மையில், சென்னை உயர் நீதிமன்றம், சிம்சன் தொழிற்சங்கத் தேர்தலை நடத்தும் பணியை எனக்கு அளித்தது. என்னை சந்திக்க வந்த இரு தரப்பையும், தேர்தல் குழுவிடமும் விசாரித்ததில், நிரந்தர தொழிலாளர்கள் மட்டுமே சங்கத்தில் உறுப்பினர்கள் என்றும், நிரந்தரத் தொழிலாளர்கள் எண்ணிக்கைக்கு இணையாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருப்பதாகவும், அவர்களுக்கு மிகக் குறைந்த கூலிதான் கொடுக்கப் படுகிறது என்பதையும், அவர்களை சங்கத்தில் சேர்ப்பதில்லை என்றும் கூறினர்.

மத்தியிலும் மாநிலத்திலும் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் போவதில்லை. அவர்கள் 1970 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் ஏதேனும் சில பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் அமர்த்தப்படுவதற்குத் தடை விதித்து ஆணை போட்டாலும், நீதிமன்றங்கள் அந்த ஆணை களுக்கு உடனே தடை கொடுத்து விடும் வாய்ப்பு உள்ளது.

எனவே, 1970 ஆம் ஆண்டு சட்டத்தையே இரத்து செய்ய வேண்டும் என்றும், நிரந்தர வேலைகள் எதிலும் ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை பணி அமர்த்தும் செய்யக் கூடாது என்றும் கோரும் ஒரு மாபெரும் இயக்கமே இன்றைய தேவை.

மீத்தேன், கெயில், சல்லிக்கட்டு, நீட் தேர்வு எதிர்ப்பு போன்றவற்றில் வெற்றியை ஈட்டியது - மாபெரும் மக்கள் இயக்கங்களே. எந்தக் கட்சியும், ஆட்சியும் இந்த வெற்றிகளுக்கு உரிமை கொண்டாட முடியாது. அப்பாதையே தொழிலாளர்கள் முன்னிருக்கும் ஒரே பாதை!

நிரந்தரத் தொழிலாளர் ஒப்பந்தத் தொழிலாளர் என்ற வேறுபாடு இன்றி அனைத்துத் தொழிலாளர் களும் ஒரே அணியில் திரள்வதே ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஒழிக்க ஒரே வழி. இதை இந்த காலகட்டத்தில் செய்யத் தவறினால், நிரந்தரத் தொழிலாளர் என்ற பிரிவே இல்லாமல் போகும் நிலை உருவாகும். ●

# நிகரன் விடைகள்

**தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை வாக்கு பெற்ற முறை சட்ட விரோதமானது என்று மு.க. ஸ்டாலின் வழக்குத் தொடுத்துள்ளார். அது பற்றி உங்கள் கருத்தென்ன?**

கடந்த 18.2.2017 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி முன்மொழிந்த நம்பிக்கை வாக்குத் தீர்மானத்தில் கமுக்க வாக்கெடுப்பு நடத்தியிருந்தால் அது சிறந்த சனநாயக மரபாக இருந்திருக்கும்.

ஏனெனில் ஒரு கிழமைக்கு (வாரத்திற்கு) தனியே ஒரு சிற்றூர் விடுதியில் அடைத்து வைத்திருந்து மந்தை போல் ஓட்டி வரப்பட்ட அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருமே தன் விருப்புரிமை அடிப்படையில் வாக்களித்தார்கள் என்பதற்கான ஒரு தோற்றமாவது கமுக்க வாக்கெடுப்பில் இருந்திருக்கும். கமுக்க வாக்கெடுப்பு என்பது யார் ஆதரித்து வாக்களித்தார், யார் எதிர்த்து வாக்களித்தார் என்று தெரியாமல் வைப்பது.

பகுதிவாரியாக (Division) சட்டப்பேரவை உறுப்பினர்களின் பெயருடன் மின்னணு எந்திரத்தில் பதிவு செய்யும் முறையை அன்று பேரவைத் தலைவர் தனபால் செயல்படுத்தினார். இதனால் சிலர் அச்சப் பட்டு சசிகலாவின் தரப்புக்கு வாக்களித் திருக்கலாம் என்ற ஊகத்திற்கு இடமிருக்கிறது.

இதை சுட்டிக் காட்டலாம். அதற்கு மேல் நடந்த வாக்கெடுப்பே செல்லாது என்று கூறுவதற்கு தமிழ்நாடு சட்டப்பேரவை நடைமுறை விதிகளில் இடமில்லை.

அவ்விதிகளில் வாக்கெடுப்பு என்ற பகுதியில் பகுதி வாக்கெடுப்பு (Division) முறை மட்டும்தான் கூறப் பட்டிருக்கிறது.

விரைவில் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று அவசரப்படுகிறார் மு.க. ஸ்டாலின்.

மக்கள் உரிமைகளுக்காகவும், தமிழ் நாட்டின் உரிமைகளுக்காகவும் மு.க. ஸ்டாலின் போராடினால் அவருக்கு செல்வாக்கு சேரும். ஆட்சியைப் பிடிக்கும் அவசரத்தில் தேவை இல்லாத குழப்பங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தால், அப்பா வழியில்தான் பிள்ளை பயணம் செய்கிறது என்ற விமர்சனம் வரும்.

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் 18.2.2017 அன்று நடந்த அடிதடி கலாட்டாவில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. இரு கழகங்களுக்கும் பங்கு உண்டல்லவா?**

அன்றைய கலாட்டா - அடிதடிகளுக்கு முழுக்க முழுக்க தி.மு.க. மட்டுமே காரணம். முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. பேரவைத் தலைவர் தனபால் அவர்களைப் பிடித்துத் தள்ளியது; அவர் சட்டையைக் கிழித்தது, அவர் நாற்காலியில் தி.மு.க. உறுப்பினர்கள் போய் குந்திக் கொண்டது எல்லாம் வன்முறை!

வெளியேற்ற வந்த பேரவைக் காவலர்களிடம் தி.மு.க. வினர் நடந்து கொண்ட முறையும் ஏற்கத்தக் கதல்ல.

தி.மு.க.வின் திட்டத்தை முன்னறிந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க.வினர் அப்பாவிகள் போல் ஆடாமல் அசையாமல் அமர்ந்து கொண்டனர். இது ஓர் உத்தி! மற்றபடி அந்த அமைதியை அ.தி.மு.க.வின் பண்பாடு என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலினை பேரவைக் காவலர்கள் தாக்கி சட்டையைக் கிழித்து விட்டார்களே. இதற்கு நடவடிக்கை கிடையாதா?**

இதில் உண்மையில் நடந்தது என்ன என்பதை அறிய ஓய்வு பெற்ற நீதிபதி அரிபரந்தாமன் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கலாம்.

**தமிழ்நாடு அரசை குற்றவாளியின் பினாமி அரசு என்றே எப்போதும் விளித்துப் பேசுகிறார் மு.க. ஸ்டாலின். இது சரியா?**



ஏற்கெனவே 2006 - 2011 காலத்திலிருந்த தி.மு.க. அரசை, மைனாரிட்டி தி.மு.க. அரசு என்றுதான் எப்போதும் விளித்துப் பேசினார் செயலலிதா.

"எங்கள் அரசு மைனாரிட்டி என்றால், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள்" என்று அன்றைய முதல்வர் கருணாநிதி அறைகூவல் விட்டார். கடைசி வரை நம்பிக்கை இல்லாத் தீர்மானம் செயலலிதா கொண்டு வரவில்லை.

அ.தி.மு.க. தலைமையும் தி.மு.க. தலைமையும் ஒன்றை ஒன்று இழிவுபடுத்திக் கொள்வதில் இன்பம் துய்ப்பவை! இவ்விரு கழகங்களும் போட்டுக் கொள்ளும் அதிகார வெறிச் சண்டைகளின் வழியாக, தமிழர்களில் கணிசமானோரின் பண்பாடு, நாகரிகம், மானம், வெட்கம், கூச்ச நாச்சம் ஆகியவற்றை அழித்து விட்டன என்பதுதான் நம் கவலைக்குரிய செய்தி!

**நெடுவாசலில் வேறு பெயரில் மீத்தேன் எடுக்கும் திட்டத்தை இந்திய அரசு செயல்படுத்துவதை எதிர்த்து நடைபெறும் மக்கள் எழுச்சி வீச்சுப் பெற்று வருகிறது; போராட்டம் விரிவடைந்து வருகிறது. தமிழ்நாடு அரசு உறுதியான நிலை எதுவும் எடுத்துப் பேசவில்லையே, ஏன்?**

தமிழ்நாடு அரசின் உறுதியான நிலை "சின்னம்மா" வுக்கு விசுவாசமாக இருந்து, "சின்னம்மா"வின் சொல்படி நடப்பதுதான்! "சின்னம்மா"வோ சிறைக்குள் இருந்து கொண்டு தில்லியுடன் பேரம் பேசும் சிக்கல்!

இந்த இக்கட்டெல்லாம் இல்லாத காலத்தில் செயலலிதா அரசு, கூடங்குளம் அணு உலையில் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டு காவல் துறையை ஏவி அறப்போராட்டம் நடத்திய அணு உலை எதிர்ப்பு மக்கள் மீது தாக்குதல் தொடுத்தார். காவிரி டெல்டா மாவட்டங்களில் நடந்த மீத்தேன் எதிர்ப்பு மக்கள் போராட்டத்தையும் இப்படியும் அப்படியுமாகத்தான் அணுகினார்.

அ.தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் மீத்தேன் எடுக்கத் தடை போட்டார் செயலலிதா!

2010இல் அன்றைய துணை முதல்வர் மு.க. ஸ்டாலின்தான் மீத்தேன் எடுப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழைப் பேராற்றல் கழகம் என்ற கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பொரேசனுடன் போட்டார்.

தமிழ்நாட்டு உரிமையில் இந்திய அரசு அவ்வளவு எளிதாக ஆக்கிரமிப்பதை அனுமதிக்கக் கூடாது என்ற கூட்டாட்சி உணர்வோ - தமிழின உணர்வோ, திராவிடக் கட்சிகளுக்குக் கிடையாது.

பதவி, பணம் ஆகியவற்றை முதன்மை இலக்கு களாக வைத்து அரசியல் சித்து விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கும் திராவிடக் கட்சிகள் இந்திய அரசுடன் இணங்கிப் போவது அல்லது அதற்குப் பணிந்து போவது என்பதில்தான் உறுதியாய் உள்ளன.

புதுச்சேரி ஒன்றியப் பகுதி அரசில் முதலமைச்சராக இருக்கும் காங்கிரசுக்காரரான நாராயணசாமி, காரைக்காலில் ஐட்ரோகார்பன் திட்டத்தை அனு மதிக்க மாட்டோம் என்று அறிவித்துவிட்டார். தானைத் தளபதிகள் புரட்சித் தலைவிகள் வலம் வரும் தமிழ்நாட்டில்தான், இந்திய அரசு அணு உலை கொண்டு வந்தாலும், மீத்தேன் கொண்டு வந்தாலும், பாதகமான இணையம் துறைமுகம் கொண்டு வந்தாலும் "ஆமாம்சாமி" போடுகிறார்கள் ஆட்சியாளர்கள்.

அ.தி.மு.க. - தி.மு.க. சமஸ்தானக் குடும்பங்கள் மீது ஊழல் வழக்குகள் ஒரு பக்கம்; ஊனமுற்ற கருத்தியல் மறுபக்கம், போலித் திராவிடக் கருத்தியல், அவர் களிடம் போலி உளவியலை உருவாக்கி விட்டன. தமிழர்களிடம் பகட்டு வீரம் பேசுவார்கள்; இந்திய ஏகாதிபத்தியத் திடம் பம்மிப் பதுங்குவார்கள்!

**நெடுவாசல் மீத்தேன் திட்டத்தை ஆதரித்துப் பேசிய பா.ச.க.வின் இல. கணேசன், "ஒரு நாடு வாழ ஒரு கிராமத்தைத் தியாகம் செய்வதில் தவறில்லை" என்று கூறியுள்ளாரே?**

பா.ச.க. மூத்த தலைவர் இல. கணேசன் ஊடகங் களில் நெடுவாசல் திட்டம் குறித்துப் பேசும் போது, "ஒரு நாட்டுக்காக, ஒரு மாநிலம் தியாகம் செய்யலாம். ஒரு மாநிலத்திற்காக ஒரு மாவட்டம் தியாகம் செய்யலாம். ஒரு மாவட்டத்திற்காக ஒரு கிராமம் தியாகம் செய்யலாம்" என்று கூறியுள்ளார்.

இல. கணேசன்தான் உண்மையைப் போட்டு உடைத்து விட்டார். ஐட்ரோ கார்பன் நச்சுக் குழாய்கள் இறக்கப்பட்டால் நெடுவாசல் கிராமம் அழிந்து விடும்; "பாரதம்" வாழ தமிழர்களின் ஒரு கிராமம் அழிந்தால் பரவாயில்லை என்று கூறி விட்டார்.

ஆரியச் சாணக்கியனின் அர்த்த சாத்திரத்தை இதில் பா.ச.க. பின்பற்றுகிறது. ஓர் ஊரைக் காப்பாற்ற ஒரு தெருவை அழிக்கலாம்; ஒரு மண்டலத்தைக் காப்பாற்ற ஒரு கிராமத்தை அழிக்கலாம். ஒரு நாட்டைக் காப்பாற்ற பல கிராமங்களையும் நகரங்களையும் அழிக்கலாம் என்பது சாணக்கியன் கோட்பாடு!

அதிருக்கட்டும்; ஐட்ரோ கார்பன் எடுப்பதால் விளை நிலங்களுக்கும் நிலத்தடி நீருக்கும் ஆபத்தில்லை என்று பா.ச.க. நடுவண் அமைச்சர்களும், எச். இராசா வும் கூறிவரும் பொய்யை இல. கணேசன் பாணியில் அவர்களும் மாற்றிக் கொள்ளலாமே! தமிழர்களுக்குக் குழப்பமில்லாமல் அவர்களைப் பற்றிய அடையாளம் தெரியுமல்லவா? ●



# தண்ணீர்த் தவிப்பு

சற்றொப்ப 140 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு மிகப்பெரும் வறட்சியில் சிக்கிக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1ஆம் நாள் தொடங்கி, திசம்பர் 31ஆம் நாள் வரையிலான வடகிழக்குப் பருவமழையின் போது, தமிழ்நாட்டுக்கு சராசரியாக 440 மி.மீ. மழை கிடைக்கும். ஆனால், நடப்பு ஆண்டில் 168. 03 மி.மீ. மழையே கிடைத்துள்ளது. கடந்த 140 ஆண்டுகளில் இது போன்ற மிகக்குறைந்த மழையளவைத் தமிழ்நாடு சந்தித்ததில்லை எனக்கூறி, தமிழ்நாட்டை "வறட்சி மாநிலமாக" அறிவித்து விட்டது தமிழ்நாடு அரசு!

தமிழ்நாடு அரசு அளித்துள்ள தகவல்களின்படி, மொத்தமுள்ள 16,682 வருவாய் கிராமங்களில், 13,305 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றுள், 1,564 கிராமங்களில் பயிர்நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், 87 விழுக்காடு வரை நிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

தற்போது தமிழ்நாடெங்கும் உள்ள ஏரி குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் பலவும் வற்றி வரும் நிலையில், குடிநீருக்காகவும் வேளாண்மைக்காகவும் தமிழ்நாடு நீரின்றித் தத்தளித்து வருகிறது. சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பெருநகரங்களில் குடிநீர் சிக்கல் அபாயகரமான நிலைக்கு சென்று கொண்டுள்ளது.

ஊர்ப்புறங்களில் காட்டில் மேய்ந்து வரும் கால்நடை வளர்ப்போர் அவற்றிற்கான வைக்கோல, குடிநீரின்றி அவை தவிப்பதைப் பார்த்துத் துயருகின்றனர்.

சென்னையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய நான்கு குடிநீர் ஏரிகளிலும், தற்போது வெறும் 1.6 ஆ.மி.க. (TMC) தண்ணீர் மட்டுமே இருப்பில் உள்ளது. மொத்தம் 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு அதாவது 3 23 ஆ.மி.க. கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியில், 842 மில்லியன் கன அடி (0.84 ஆ.மி.க.) தண்ணீரும், 881 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரியில் 41 மில்லியன் கன அடியும், புழல் ஏரியில் மொத்தக் கொள்ளளவான 3,300 மில்லியன் கன அடியில் 577 கன அடி, 3,645 மில்லியன் கன அடி கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது 208 மில்லியன் கன அடி நீர் மட்டுமே தற்போது உள்ளது.

க.அருணபாரதி

இந்த நான்கு ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11,057 மில்லியன் கனஅடி (11.05 ஆ.மி.க.) ஆகும். ஆனால் தற்போது நான்கு ஏரிகளிலும் இருக்கும் தண்ணீரைச் சேர்த்து 1,668 மில்லியன் கன அடி (1.66 ஆ.மி.க.) நீர் மட்டுமே உள்ளது. அதாவது மொத்த கொள்ளளவில் 10 சதவீதம் தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. ஆனால், கடந்த ஆண்டு இதே தேதியில் 8,367 மில்லியன் கன அடி (8.36 ஆ.மி.க.) நீர் இருந்தது.

இந்நிலையில், வீராணம் ஏரி வற்றி விட்ட நிலையில், அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வரப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. ஆந்திர அரசு, கண்டலேறிலிருந்து சென்னைக்கு அளித்து வரும் தண்ணீரை 1,500 கன அடியிலிருந்து 1,200 கன அடியாகக் குறைத்துள்ளது.

சென்னையைச் சுற்றி நடைபெற்று வரும் பெரு நிறுவனங்களின் மனை வணிகக் கட்டுமானப் பணிகள் நிலைமையை மேலும் மோசமாக்கிக் கொண்டுள்ளன. நாள்தோறும் சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம் மக்களுக்கு அளிக்கும் குடிநீரில் 20 விழுக்காடு 1000 லிட்டர் 60 ரூபாய் என்ற மலிவு விலையில் இதுபோன்ற நிறுவனங்களுக்கும், சொகுசு விடுதிகளுக்கும் செலவிடப் படுகின்றது. (***காண்க*** : தி இந்து, 26.2.2017).

குடிநீர்ச் சிக்கலைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகரக் குடிநீர் வாரியம் தற்போது, சென்னையைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம் - திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள வேளாண்மைக்கான கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்தல், ஆழ்துளைக் கிணறுகளை அதிகப்படுத்துதல், கல் குவாரிகளில் தேங்கியுள்ள மழை நீரைப் பயன்படுத்துதல் என பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகிறது.

மனிதர்களுக்கு மட்டுமல்லாது, வனவிலங்குகளும் இந்த வறட்சியால் கடும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றன. வனப்பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக, வனவிலங்குகள் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்கு வரும் போக்கு அதிகரித்துள்ளது. பல பகுதிகளில் நீரின்றி வன விலங்குகள் இறந்துள்ளன. நீலகிரி மாவட்டம் - முதுமலைக் காட்டில் 5 மாத யானை உட்பட இரண்டு யானைகளும், சீகூர் - தெங்கு மராட்டா பகுதிகளில் இரண்டு யானைகளும் என மொத்தம் 4 யானைகள் இறந்துள்ளன. கீழ் கோத்த கிரியில், 2 கரடிகள் இறந்துள்ளது கண்டெடுக்கப்பட்டது. இவை நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகின்றன.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய தமிழர்கள், இப்படிப்பட்ட கொடும் வறட்சியில் சிக்கிக் கொள்ள என்ன காரணம்? பருவமழை பொய்த்துப் போய் விட்டதும், வரலாறு காணாத கதிரவன் வெப்பமும் மட்டுமே இந்த வறட்சிக்குக் காரணம் என எளிதில் நாம் ஒதுக்கி விட முடியாது! மனிதத் தவறுகளும் இதற்குக் காரணமாக உள்ளது!

தீராத் தமிழினப் பகையோடு செயல்படும் இந்திய அரசும், கர்நாடக அரசும் கூட்டு சேர்ந்து கொண்டு காவிரி நீரை மறுத்துவிட்டதன் காரணமாக, இந்த ஆண்டு காவிரிப் பாசன மாவட்டங்களில் செயற்கை யான வறட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரண மாக காவிரிப் பாசன மாவட்டங்களில் 200க்கும் மேற் பட்ட உழவர்கள் உயிரிழந்த சோகமும் நம் நெஞ்சைத் துளைத்தெடுக்கிறது.

நூறாண்டுகள் காணாத வறட்சி - 200க்கும் மேற் பட்ட உழவர்கள் செத்து மடிந்த துயரம் இவை எதையும் கணக்கில் கொள்ளாத இந்திய அரசு, இது வரை 1 ரூபாய்கூட தமிழ்நாட்டுக்கு இழப்பீடு அறிவிக்க வில்லை. ஆனால், தமிழ்நாட்டிலிருந்து இந்திய அரசு அள்ளிச் செல்வதோ பல இலட்சம் கோடி ரூபாய்!

காவிரியைப் போலவே தொடர்ந்து பல ஆண்டு களாக அண்டை மாநிலங்களால் நடத்தப்பட்டு வரும் முல்லைப் பெரியாறு பாலாறு பாம்பாறு உள்ளிட்ட ஆற்று நீர் உரிமைத் தடுப்பு மறுப்பு அடாவடிகள் காரணமாக, ஆற்றுப் பாசனத்தை நம்பி வேளாண்மை செய்து வந்த தமிழ் மக்களில் கணிசமானவர்கள், மெல்ல மெல்ல இதிலிருந்து விடுபட்டு இயந்திரங்களைக் கொண்டு நிலத்தடி நீர் பாசன முறைக்கு மாறினர்.

இன்னொருபுறத்தில், இதன் காரணமாகவும் இந்திய அரசின் வேளாண்மை விரோத நடவடிக்கை காரண மாகவும், வேளாண்மையிலிருந்து கணிசமான தமிழர்கள் தமிழ்நாடெங்கும் வெளியேற்றப்பட் டார்கள்.

ஆந்திராவில் செம்மரம் வெட்டினார்கள் என, அம்மாநிலக் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் 20 பேரும், அவர்களுடைய சொந்த மாவட்டமான திருவண்ணாமலையில் வேளாண்மை செய்து வந்த பழங்குடி மக்கள்தாம்! ஆனால், வறட்சி அவர்களை, கூலிகளாக மாற்றியது! அவர்கள் வேளாண்மையை இடையூறின்றித் தொடர் வதற்கு ஏற்பாடுகளை செய்திருந்தால், அவர்களை இழந்திருக்கத் தேவையில்லை!

வேளாண்மையிலிருந்து உழவர்களை வெளியேற்றி விட்டு, அவர்களின் விளை நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் அள்ளிக் கொடுப்பதும், ஓ.என்.ஜி.சி., ரிலையன்சு போன்ற எண்ணெய் - எரிவளி நிறுவனங் களுக்கு வேளாண் நிலங்களை அளித்து - அந்நிலங் களுக்கு அடியிலுள்ள கனிமங்களைக் கொள்ளை யடிக்கச் சொல்வதும்தான் “வளர்ச்சி“ என்று திட்ட மிடும் இந்திய அரசு, இந்த ஆற்று நீர் உரிமை மறுப்புகளுக்கு ஆதரவாகத் துணை செய்தது.

இன்னொருபுறத்தில், வேளாண்மைப் பரப்பு பெருமளவு சுருங்கிவிட்ட நிலையில், அவை வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலை சாலை உள்ளிட்ட பயன்பாட்டு நிலங்களாகவும் மாறிவிட்டன. தமிழ்நாடு வேகவேகமாக நகர்மயமானது.



**நூறாண்டுகள் காணாத வறட்சி – 200க்கும் மேற்பட்ட உழவர்கள் செத்து மடிந்த துயரம் இவை எதையும் கணக்கில் கொள்ளாத இந்திய அரசு, இதுவரை 1 ரூபாய்கூட தமிழ்நாட்டுக்கு இழப்பீடு அறிவிக்கவில்லை. ஆனால், தமிழ்நாட்டிலிருந்து இந்திய அரசு அள்ளிச் செல்வதோ பலஇலட்சம் கோடிரூபாய்!**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011ஆம் ஆண்டின் படி, இந்தியாவிலேயே அதிவேகமாக நகரமயமாகும் மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருந்தது. 1991ஆம் ஆண்டு 34.15 விழுக்காட்டு மக்கள் மட்டுமே தமிழ்நாட்டின் நகரங்களில் வாழ்ந்து வந்த நிலையில், 2011ஆம் ஆண்டு அது 48.45 விழுக்காடாக உயர்ந்தது. நகரங்களோ தொழில்துறை "வளர்ச்சி"யின் தலைநகரங்களாக விளங்கின.

புதிது புதிதாக வந்த தொழிற்சாலைகள் பலவும் நிலத்தடி நீரை வரலாறு காணாத அளவிற்கு சூறையாடின. பெப்சி - கோக் தொடங்கி நோக்கியா - ஹூண்டாய் வரை என பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களும், சாயப்பட்டறை - தோல் பதனிடம் தொழிலகங்கள் என அயல்நாட்டு ஏற்றுமதியைக் குறி வைத்து இயங்கும் பல்வேறு தொழில்களையும் ஊக்குவித்த இந்திய அரசு, தமிழ்நாட்டின் நிலத்தடி நீரை உறிஞ்ச இந்நிறுவனங்களுக்கு தில்லியிலிருந்து அதிகாரம் அளித்தது. தமிழ்நாட்டுக் கங்காணி அரசும், கட்சிகளும் தில்லி எசமானர்களும், இந்தத் தனியார் முதலாளிகள் அளிக்கும் கையூட்டுகளுக்காகவே உழைத்தனர். எனவே, தமிழ்நாட்டின் நீர் வளங்களைச் சுரண்டுவதை இவர்கள் எதிர்க்கவில்லை.

சிறுதொழில் செய்ய உரிமம் கேட்டால் பல மாதங்கள் இழுத்தடிக்கும் தமிழ்நாடு அரசு என்ன செய்தது தெரியுமா? நெல்லை மாவட்டம் - கங்கை கொண்டான் சிப்காட் வளாகத்தில், தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு லிட்டர் 3.75 பைசா வீதத்தில் நாள்தோறும் 15 இலட்சம் லிட்டர் நீரை எடுக்க அனுமதி கேட்ட பெப்சி நிறுவனத்திற்கு, பதினைந்தே நாட்களில்(5.2.2014) அனுமதி அளித்தது! அதுவும், 99 ஆண்டுகளுக்கு! கடந்த 2015ஆம் ஆண்டு(27.10.2015), இதனை எதிர்த்துப் போராடியோரை தடி கொண்டு தாக்கியது தமிழ்நாட்டுக் காவல்துறை!

நிலத்தடி நீரை உறிஞ்சுவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீரையும் - ஆற்று நீரையும் - ஏரி, குளம் உள்ளிட்ட நீர் நிலைகளையும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் அமைக்கப்படும் இவ்வாறான தொழிற்சாலைகள் காரணமாக வேலை வாய்ப்புகள் பெருகிவிட்டன என்று கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் சில இலட்சம் பேருக்கு மட்டும் வேலை

அளிக்கப்பட்டது. பல இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்த வேளாண்மையும் சிறுதொழிலும் நசுக்கப்படுகின்றன.

2005ஆம் ஆண்டு, இதே இடத்தில் 3 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டுமென அனுமதி கேட்ட பெப்சி நிறுவனம், தற்போது 15 இலட்சம் லிட்டர் தண்ணீர் வரை வேண்டுமெனக் கேட்கிறது. இந்த "வளர்ச்சி"யை நாம் கொண்டாடவா முடியும்?

இன்னொருபுறத்தில், இந்த பன்னாட்டு நிறுவனங்கள் ஏன் இங்கு வந்து குவிய வேண்டும் என நாம் சிந்திப்பதில்லை. தமிழ்நாட்டில் மனித உழைப்பு மலிவாகக் கிடைப்பது மட்டுமே இதற்குக் காரணம் கிடையாது! இதன் பின்னணியில் இன்னொரு முக்கியக் காரணியும் உண்டு!

ஒரு பொருளை உற்பத்தி செய்ய நேரடியாகவோ மறைமுகமாகவோப் பயன்படும் நீரை "மறை நீர்" (Virtual water) என்கிறார்கள். அதன்படி, ஒரு சோடி தோல் செருப்பு உற்பத்தி செய்ய 17,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு ஜீன்ஸ் பேன்ட்டுக்கு 10,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு 1.1. டன் எடையுள்ள சொகுசு மகிழுந்து தயாரிக்க 4,00,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.

தனது நாட்டின் நீர் வளத்தை உறிஞ்சி இவ்வளவு தண்ணீரைக் கொண்டு பொருள் உற்பத்தியில் ஈடுபடத் தயங்கும் பல்வேறு உலக நாடுகள், இந்திய அரசை ஆளும் கொள்ளைக்கார கும்பல்களிடம் பேரம் பேசி, தமிழ்நாட்டிற்கு வந்து கடை விரிக்கின்றனர். தொழிற்சாலைகள் அமைக்கின்றனர். எனவே, இந்த நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அளிக்கிறோம் என்ற பெயரில் மண்ணின் நீர் - நிலம் உள்ளிட்ட இயற்கை வளங்களையே உறிஞ்சிக் கொழுக்கின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தனது GRACE - (Gravity Recovery and Climate Experiment) செயற்கைக்கோள் ஆய்வுகளின் மூலம், இந்தியாவில் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருவதை உறுதிப்படுத்தியது. இந்திய அரசின் நடுவண் நிலத்தடி நீர் வாரியம் (Central Ground Water Board - CGWB) தமிழ்நாட்டின் நிலத்தடி நீரில் 77 விழுக்காடு உறிஞ்சப்பட்டு விட்டதாக எச்சரிக்கிறது. (**காண்க:** தி இந்து ஆங்கிலம் , 26.01.2017).

இவ்வாறான சூழலில், நிலத்தடி நீரை நேரடியாக பாதிக்கும் மணல் கொள்ளை, தேர்தல் கட்சிப் பிரமுகர்களின் துணையோடு தமிழ்நாட்டில் கொடிகட்டிப் பறப்பது, வேதனையிலும் வேதனை!

மக்களுக்கு உயர்தர மருத்துவம் அளிக்க எய்ம்சு மருத்துவமனை அமைக்க தமிழ்நாட்டில் இடமில்லை என கைவிரித்த இந்திய அரசு, தமிழ்நாட்டின் நிலத்தடி நீரை உறிஞ்சி வெளியேற்றும், மீத்தேன் - ஐட்ரோ கார்பன் திட்டங்களைக் கொண்டு வருவதன் பின்னணியில் வெறும் பொருளியல் நலன் மட்டுமே இருப்பதாகத் தெரியவில்லை! தமிழ்நாட்டை நீரற்றப் பாலைவனமாக்கி தமிழர்களை இம்மண்ணிலிருந்து வெளியேற்ற வேண்டுமெனத் துடிக்கும் ஆரிய இன வெறியும் இதில் அடங்கியிருப்பதாகவேத் தெரிகிறது!

பல்வேறு திட்டங்களின் பெயராலும், தொழிற்சாலைகளின் பெயராலும், தமிழர்களின் நீர் மேலாண்மை அழிக்கப்பட்டு - ஆற்று நீர் உரிமைகள் மறுக்கப்பட்டு - நிலத்தடி நீர் வளம் அதிவேகமாக உறிஞ்சப்பட்டு தமிழர்கள் இன்று ஒரு செயற்கையான வறட்சியின் பிடியில் சிக்க வைக்கப்பட்டுள்ளோம். இவற்றை உணர்ந்து, இனியாவது நாம் புதிய திசையில் செயல்பட வேண்டும்.

உடனடியாக, தமிழ்நாடு முழுவதும் தண்ணீரை உறிஞ்சும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்திக்குத் தமிழ்நாடு அரசு தடை விதிக்க வேண்டும். தற்போது ஓரளவு நீர் இருப்பிலிருக்கும் ஏரி, குளங்களில் மாசு ஏற்படாமல் தடுத்து, அவற்றைக் குடிநீருக்குப் பயன்படுத்த வேண்டும். வனப்பகுதிகளில் உள்ள வனவிலங்குகளின் குடிநீருக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்யும் அதே நேரத்தில், இந்த வறட்சிக்காலத்தைப் பயன்படுத்தி, ஏரி, குளம், ஆறு உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளையும் தூர் வாரும் பணியை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும். மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை விரிவாகச் செயல்படுத்திட வேண்டும். ஆக்கிரமிப்பில் உள்ள ஏரி, குளம், ஆறு ஆகியவற்றை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். தண்ணீரை மக்கள் சிக்கனமாகப் பயன்படுத்த வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மக்களும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திப் பழகிக் கொள்ள வேண்டும். நம் வாழ்விடங்களைச் சுற்றியுள்ள ஏரி குளம் ஆறு உள்ளிட்ட நீர் நிலைகளில் கழிவு நீர் உள்ளிட்ட எவ்வித மாசுபடுத்தும் பொருட்களையும் நாம் அனுமதிக்கக் கூடாது. பிறர் அவ்வாறு செய்தால், அதை கேள்வி கேட்கவும் தடுக்கவும் வேண்டும்.

ஆற்று நீர் உரிமைகளை மீட்பதிலும், மணல் கொள்ளையைத் தடுப்பதிலும், நீர் நிலைகளை பராமரிப்பதிலும் முழுமையான கவனம் செலுத்தி நாம் உழைக்காவிடில், தமிழினம் தன் மண்ணிலேயே அகதியாகும் நிலை ஏற்படும்! "மூன்றாம் உலகப் போர் நீருக்காக" என்று பலரும் கூறுவது பொய்யல்ல! எனவே, விழிப்போம்! வீரியம் கொள்வோம்!

●

கோவை குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் "தமிழ் மன்றம்" சார்பில், பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பங்கேற்புடன் 17.02.2017 மற்றும் 18.02.2017 ஆகிய இருநாட்களாக நடந்து வந்த "தமிழ் அறிவுத் திருவிழா 2017" பிப்ரவரி 18 அன்று நிறைவு பெற்றது.

கல்லூரியின் தமிழ் மன்றம் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில், பிப்ரவரி 17 அன்று கோவையைச் சுற்றியுள்ள பல்வேறு அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கவிதை, பேச்சு, கட்டுரை உள்ளிட்ட பல்வேறு திறனறிதல் போட்டிகள் நடைபெற்றன.

இரண்டாம் நாளான 18.02.2017 அன்று, தமிழ்நாடு தழுவிய அளவில் பல்வேறு கல்லூரி மாணவ மாணவியர் பங்கேற்ற கவியரங்கம், பேச்சு, விவாதம், நாடகம், நடனம் உள்ளிட்ட திறனறிதல் போட்டிகள் நடந்தன. மாலை விழாவில் நிறைவரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் நிறைவரங்கில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கருத்துரையாற்றியதோடு, போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பாராட்டினார். தமிழ் மன்றப் பொறுப்பாளர் பேராசிரியர் திரு. ப. சிவக்குமார், முன்னாள் மாணவரும், தொழில் முனைவோருமான திரு. சந்திப் நாகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்புரையாற்றிய தோழர் பெ. மணியரசன் பின்வருமாறு பேசினார்:

"தமிழ் மன்றம் நடத்தும் இவ்வாண்டு விழாவிற்குத் "தமிழ் அறிவுத் திருவிழா" என்று பெயர் சூட்டியிருக்கிறீர்கள். பாராட்டிற்குரிய தலைப்பு! விழா தொடங்கும் முன் போட்ட காணொலிக் காட்சியில், முத்தமிழ் நிகழ்ச்சி எனப் போட்டிருந்தீர்கள்.



# "நீங்கள் பின்பற்ற மட்டுமே பிறந்தவர்கள் இல்லை, வழிகாட்ட உரிமையும் தகுதியும் படைத்தவர்கள்!"

## கோவை குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களிடையே தோழர் பெ. மணியரசன் பேச்சு!



தமிழ் மொழி என்றாலே அறிவு மொழி என்றுதான் பொருள். தமிழினம் ஓர் அறிவியல் சமூகம்! இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் குறிக்கும் வகையில் முத்தமிழ் என்று நாம் சொல்கிறோம்.

இயல், இசை, நாடகம் என்ற இம்மூன்றும் உலகத்தின் பல மொழிகளிலும் இருக்கின்றன. ஆனாலும், அவை மூன்று ஆங்கிலம், மூன்று பிரஞ்சு, மூன்று டச்சு என்று போட்டுக் கொள்வதில்லை! தமிழர்கள் மட்டும் ஏன் முத்தமிழ் எனப் போட்டார்கள்? எதையும் நுணுகி ஆராய்ந்து வகுத்துத் தொகுக்கின்ற அறிவியல் முறை நம் முன்னோர்களிடம் இருந்தது.

இயல், இசை, நாடகம் மூன்றுக்கும் மூன்று வகை இலக்கணங்களைச் சொன்னார்கள். அதற்குள்ளும் இரண்டு வாழ்வியல் பிரிவுகள் பிரித்தார்கள். ஒன்று, அக இலக்கியம். இன்னொன்று, புற இலக்கியம். அக இலக்கியம் என்பது, ஆண் பெண் காதல் வாழ்க்கையை மையப்படுத்தியது.

உலகில் பல மொழிகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அக இலக்கியம் என்ற தனிப் பிரிவு கிடையாது. இந்தியத் துணைக் கண்டத்தில், காவியங்களும் பல்வேறு இலக்கியங்களும் நிறைந்த மொழி என சமற்கிருதத்தைச் சொல்கிறார்கள். அந்த சமற்கிருதத்தில் நம்முடைய அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை போன்ற அக இலக்கியம் கிடையாது. ஒரு அகத்துறையும் கிடையாது. தமிழர்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து தொகுக்கக்கூடியவர்கள். ஒரு கருத்தோ ஒரு கோட்பாடோ சொன்னால், அதற்கு வரைவிலக்கணம் சொல்லக்கூடிய தருக்கவியல் பாங்கு தமிழர்களிடமே இருந்தது. மாணவர்களாகிய நீங்கள்கூட, யாராவது ஒரு கோட்பாட்டையோ புதிய கருத்தையோ சொன்னால் அதற்கு வரைவிலக்கணம் சொல்லுங்கள் என்று கேளுங்கள்.

இரண்டாயித்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பாக தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்



என்ற புகழ் பெற்ற பாண்டிய மன்னனுக்கு குட புலவியனார் என்ற புலவர் அறிவுரை கூறினார். மன்னர்களைப் பொய்யாகப் புகழ்ந்து பாடுபவர்கள் அல்லர் நம் சங்கப்புலவர்கள்! இப்பொழுது உள்ளது போல் கவிஞர்கள், தமிழறிஞர்கள் அந்த காலத்தில், ஆட்சியாளர்களின் முதுகு சொறிந்து வாழவில்லை!

அந்த வகையில்தான் குடபுலவியனார் பாண்டிய நெடுஞ்செழியனைப் பார்த்து சொன்னார்: "உன் போர்க்கள வெற்றிகள், உனக்கு நிலைத்த புகழைத் தராது. மக்கள் உயிரைப் பாதுகாக்கும் செயல்கள்தான், உனக்குப் புகழைத் தரும். இறந்த பின்னும் உன் புகழை நிலை நிறுத்தும்" என்று சொல்ல வந்த குடபுலவியனார், சில வரையறுப்புகளைச் சொன்னார்.

"உயிர் என்பது உணவின் பிண்டம். அதாவது, உணவினால் இயங்குவது. உணவு என்பது நீரும் நிலமும் சேர்ந்தது. நிலத்தோடு நீரை இணைத்தவர்தான் உணவைக் கொடுத்து, உயிரைக் காத்தவர் ஆவார். எனவே, நீ ஏரி, குளங்களைப் பெருக்கி மக்களைக் காப்பாற்றினால், இம்மண்ணில் உன் புகழ் தங்கும். இல்லையேல் தங்காது" என்றார். இந்தப் பாட்டில், உயிர் என்றால் என்ன, உணவு என்றால் என்ன என்று வரைவிலக்கணம் தருகிறார்.

மாணவர்களாகிய நீங்கள் மற்றவர்கள் பேச்சை, பின்பற்றுவதற்கு மட்டுமே பிறந்தவர்கள் இல்லை! வழிகாட்டுவதற்குரிய உரிமையும், தகுதியும் படைத்தவர்கள் நீங்கள்! (கைதட்டல்) எனவே சீரழிந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தைத் தலை நிமிர்த்த, வழிகாட்ட வாருங்கள்!

சிந்தனைகளை அச்சப்படாமல் வெளிப்படுத்துங்கள்" என்றார். அதையேதான், உங்களிடத்தில் நான் சொல்கிறேன்.

முன்முயற்சி (Initiative) எடுப்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். சமூகத்தில் உள்ள முக்கியமான சிக்கலே முன்முயற்சி எடுப்போர் மிகமிகக் குறைவாக இருப்பதுதான்! சாலையில் ஒருவர் விழுந்து கிடந்தால், "அய்யோ விழுந்து கிடக்கிறாரே" என்று சொல்லிக் கொண்டே பலர் போய்க் கொண்டிருப்பர். அவர்களுக்கு இரக்க குணம் இல்லாமல் இல்லை! முன்முயற்சி எடுப்பதில் தயக்கம் இருக்கிறது. சிலருக்கு வெட்கம் அல்லது கூச்சம்கூட இருக்கும். பத்து நிமிடம் கழித்து அதே சாலையில் இருசக்கர வண்டியில் வந்த ஒருவர், வண்டியை நிறுத்திவிட்டு கீழே விழுந்து கிடப்பவரைத் தூக்குவார். உடனடியாகப் பலரும் அங்கே ஓடி வந்துவிடுவார்கள். ஒருவர் சோடா வாங்கிக் கொடுப்பார். இன்னொருவர் தண்ணீரை முகத்தில் தெளிப்பார். மற்றொருவர் விழுந்து கிடக்கும் அவரது இரு சக்கர வண்டியைத் தூக்கி நிறுத்துவார்.

இந்தச் செயல்கள் பத்து நிமிடங்களாக அவர் விழுந்து கிடந்தபோது, ஏன் நடக்கவில்லை? முன் முயற்சி எடுப்பதில் உள்ள குறைபாடுதான்! முன்முயற்சி எடுப்பவர் வந்தவுடன் மக்கள் கூடிக் கொண்டார்கள்.

நீங்கள் முன்முயற்சி எடுப்பவராக இருங்கள்! புதிய வரலாற்றை உங்களால் உருவாக்க முடியும்! நீங்கள் முன்முயற்சி எடுத்தால், தமிழ்ச்சமூகம் உங்களோடு சேர்ந்து கொள்ளும்! (கைதட்டல்)

**மாணவர்களாகிய நீங்கள் மற்றவர்கள் பேச்சை, பின்பற்றுவதற்கு மட்டுமே பிறந்தவர்கள் இல்லை! வழிகாட்டுவதற்குரிய உரிமையும், தகுதியும் படைத்தவர்கள் நீங்கள்! எனவே சீரழிந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தைத் தலை நிமிர்த்த, வழிகாட்ட வாருங்கள்!**

உங்களிடம் புதிதாகத் தோன்றும் கருத்துகளை கூச்சப்படாமல், தயங்காமல், தாழ்வு மனப்பான்மை இல்லாமல் வெளிப்படுத்துங்கள். தவறாகச் சொல்லி விடுவோமோ என்று அச்சப்படாதீர்கள். ஒருவேளை, தவறாகப் போய்விட்டால், திருத்திக் கொள்ளலாம். அடுத்த தடவை சரியான கருத்தை வெளியிட முடியும்!

ஆங்கில அறிஞர் எமர்சன் "தன்னம்பிக்கை" என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில், "உங்கள் சிந்தனையில் தோன்றும் புதிய கருத்துகளைத் தயங்காமல் வெளிப்படுத்துங்கள். தாழ்வு மனப்பான்மை காரணமாக அல்லது கூச்சம் வெட்கம் ஆகியவற்றின் காரணமாக அதை வெளியே சொல்லாமல் இருந்தால், ஒரு சில ஆண்டுகள் கழித்து அதே கருத்தை இன்னொருவர் சொல்வார். அப்போது உங்கள் நிலை என்ன? இக்கருத்தை முதலில் சிந்தித்த நீங்கள், இன்னொருவர் சொன்ன பிறகு அதை ஏற்க வேண்டிய நிலைக்கு உள்ளாவீர்கள். அந்தக் கருத்து, அவருடைய தாக இருக்கும்! எனவே, உங்களிடம் தோன்றும்

அந்தக் காலத்தில், ஒற்றையடிப் பாதையில் பயணம் போன ஒருவர், அப்பாதையில் கிடந்த முள் கொத்தைக் கவனிக்காமல் மிதித்துவிட்டார். அது குத்தி விட்டது! அவர் உடனே நின்று காலிலிருந்த முள்ளை நீக்கிவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார். ஆனால், அந்த முள் கொத்து பாதையில் அதே இடத்தில் கிடந்தது. அரைமணி நேரம் கழித்து, இன்னொருவர் அந்தப் பாதையில் வந்தார். அவர் முள் கொத்தைக் கவனித்துவிட்டார். காலில் குத்திக் கொள்ளாமல் ஒதுங்கிப் போய்விட்டார். அரைமணி நேரம் கழித்து, மூன்றாவதாக ஒரு நபர் வந்தார். அவர் முள் கொத்தைப் பார்த்தார். அவர் அதை எடுத்து அருகிலிருந்த வேலியில் போட்டு விட்டுப் பயணத்தைத் தொடர்ந் தார். அந்த மூன்றாவது நபராக நீங்கள் இருங்கள்! (கைதட்டல்)".

இவ்வாறு தோழர் பெ. மணியரசன் பேசினார். நிறைவில், தமிழ் மன்றப் பொருளாளர் மாணவர் கௌரி சங்கர் நன்றி நவின்றார். ●

● யோகேஸ்

உண்மையில் ஆன்மீகம் என்றால் என்ன? எப் பொழுதும் கடவுளை வணங்கிக் கொண்டு, தியான நிலையில் லயித்திருப்பதா? நேர்த்தியுடன் மண் பானையை வனையத் தொடங்கும் கைவினைஞர் தனக்குள் நிலைகொள்ளத் தொடங்கும் தன்விழிப்பு போல - கடந்த கால, எதிர்கால, நிகழ்கால எண் ணங்களற்ற நிலை! அதுதானே ஏதுமற்ற சிவநிலை! அதுவே பார்போற்றும் நம் தமிழரின் ஆன்மீகம்!

தமிழ்த்தேசத்தில் அதை உணர்ந்து வலியுறுத்திய நம் சித்தர்கள் அதிகம் வசித்த பகுதியான வெள்ளைங் கிரி மலையில் காடுகளை அழித்து "சிவனுக்கு" சிலை வைக்கிறார் ஈஷா நிறுவனத்தின் தலைவர் ஜக்கி வாசு தேவ்! அதைத் திறந்து வைக்க ஓடோடி வருகிறார் இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோடி!

கர்நாடகத்தின் அடாவடியால் காவிரி நீர் மறுக்கப் பட்டு இருநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் உயிரிழந் துள்ளனர். அவர்களது குடும்பங்களைப் பார்த்து ஆறுதல் சொல்ல வரவில்லை நரேந்திரமோடி! வர்தா புயலால் சென்னையே உருக்குலைந்து போயுள்ளது, அந்த சேதங்களைப் பார்வையிட வரவில்லை நரேந்திர மோடி! காட்டை அழித்து சிலை திறக்கிறார் ஜக்கி வாசுதேவ்" என தமிழ்நாட்டின் சூழலியலாளர்கள் பலரும் ஆதாரங்களுடன் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், ஜக்கி வாசுதேவுக்காக ஓடோடி வருகிறார் நரேந்திரமோடி!

தமிழர்களின் மரபு விளையாட்டான ஏறுதழுவலை "காட்டுமிராண்டித்தனம்" என கண்டித்த புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கிரண் பேடி, காடுகளை அழித்து நடத்தப்படும் ஜக்கியின் சிலை திறப்பு நிகழ்வுக்கு வருகை தந்து, தான் யாரென காட்டினார். அந்தளவிற்கு, ஜக்கி வாசுதேவ் அப்படி என்ன சாதனை படைத்து விட்டார்? அவருக்காக இந்தியாவின் தலைமையமைச்சர் நரேந்திர மோடி ஏன் மெனக்கிட வேண்டும்?

உலகிற்குப் பொதுவான சிவநிலையை 'சிவன் என்ற பெயரில் ஒரு மதமாக, இந்துத் துவத்தின் சரிபாதியாகக் காட்டிக்கொள் வதன் மூலம் தமிழர்களை இந்துத் துவவாதி களாக்கி, அந்த இந்துக்களை இந்தியர் களாக்கி மதச்சாயத் தைப் பூசிக்கொண்டு இனவக் கிரத்தைச் செலுத்தும் ஆரிய இந்துத்துவ பா.ச.க விற்கு தொண்டு செய்யும் 'சத்குரு'வே ஜக்கி வாசு தேவ்! யார் இவர்?

**யார் இந்த ஜக்கி?**

இருபது ஆண்டுகளுக்கு முன் சஹஜஸ்திதி யோகா என்னும்




# தமிழர் மரபை அழிக்கும் ஜக்கி

யோகக் கலையை கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக, பெங்களூர் உணவகம் ஒன்றில் கோழி இறைச்சி சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்தான் ஜக்கி! இன்னும் சிலர் பட்டவர்த் தனமாக கஞ்சா விற்றவர் என்றும் கடுமையாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

தன்னை "சத்குரு" எனவும், தானே முக்திக்கு வழி காட்டி எனவும் சொல்லிக்கொள்ளும் இவர் 1957 இல் தெலுங்கராக, கர்நாடக மாநிலம் மைசூரில் பிறந்தவர். இது தன்னுடைய மூன்றாவது பிறவி என்று சொல்லிக் கொள்ளும் அவர், தன் முதல் பிறவியில் பில்வாஸ் என்னும் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தேன் என்றும், இரண்டாவது பிறவியில் சத்குரு ஸ்ரீப்ரமா என்ற பெயரில் தேனி அருகில் பிறந்து ஊட்டியில் வாழ்ந்து வெள்ளைங்கிரி மலையில் உயிர் விட்ட தாகவும் சொல்லிக் கொள்கிறார்.

ஆன்மீக பாதைக்கு துறவற வாழ்க்கைதான் சிறந்தது, குடும்ப வாழ்கை ஒரு சுமையோடு மலை ஏறுவது போல கடினமானது என்று உலக மக்களுக்கு போதனை செய்த ஜக்கி வாசுதேவ் அவர்கள், கோவையில் தன் சேவையை துவங்கும் முன் 1980களில், கர்நாடக மாநிலம் மைசூரில் ரிஷி பிரபாகர் என்ற யோகா குருவிடம், யோகா ஆசிரியராக பணியாற்றி வந்தார். அங்கு ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து பெற்ற விஜி என்ற பெண்ணை சந்திக்க நேர்ந்தது. அவருடன் நெருங்கி பழகியதில் காதல் வயப்பட்டு திருமணமும் செய்து கொண்டார். இவர்களுக்கு "ராதே" என்றொரு மகள் இருக்கிறார்.

பிறகு விஜி தனது "அணாகத்தா" சக்ராவில் இருந்து தனது உயிரை விட்டதாக ஜக்கி வாசுதேவ் கூறுகிறார். ஆனால், விஜியை ஜக்கி வாசுதேவ் கொன்று விட்டதா கவும், ஆசிரமத்தில் வேறு பெண்ணுடன் தொடர்பு இருந்ததாக வும் விஜியின் தந்தை காங்கன்னா காவல் துறையில் புகாரும் கொடுத்துள்ளார்.

ஜக்கியின் மனைவி விஜி மரண வழக்கு நிர்பயா, விஷ்ஊசி கும்பல் போன்ற பிரபலமான கொலை வழக்கு களில் ஒன்றாய் செய்தித்துறையில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர் பரபரப்பாய் பேசப்பட்ட கொலை வழக்குதான்! அது கொலை என்று ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் தொடர்ந்த பொதுநல வழக்கில், இறுதியில் ஈஷா தன் மனைவி விஜி தற் கொலை செய்துகொண்டதாக அறிக்கை மட்டுமே கொடுத்தார். ஆனாலும் அது முழுவதுமாக மெய்ப் பிக்கப்படவில்லை!

ஈஷாவில் 'சந்நியாசம்' எடுக்கிறவர்கள் முதலில் குடும்பத் தொடர்பை முழுமையாக நிறுத்திக்கொள்ள வேண்டும். அவர்களின் கல்விச் சான்றிதழ்கள் முதற் கொண்டு அனைத்து ஆவணங்களும் ஈஷா மையத்தின் கட்டுப்பாட் டின் கீழ் போய்விடும். சம்பந்தப் பட்டவர்கள் பெயரில் இருக்கும் சொத்து, நகை, பணம் போன்றவை கூட ஈஷாவின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். இவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள்தான் என்ன வென்பது தெரியவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அரை போதையில்தான் இவர்கள் இருப் பார்கள்! இப்படி, தன்னை நாடி வரும் பலருக்கும் மொட்டை அடித்து, அவர்களது சொத்துகளையும் படித்துப் பெற்ற பட்டங்களையும் பிடுங்கி வைத்துக் கொண்டு



**தமிழர்களின் மரபான ஓகக்கலையை, இந்துத்துவா வாதிகள் "யோகா" என்ற பெயரில் உருமாற்றுவதும், தென்னாடுடைய சிவனை ஆரியத்திணிப்புகளுக்கு முதலீடாக்குவதும் ஜக்கியின் தொடர்ந்துவரும் "தொண்டு"! இனியும், கண் மூடிக் கிடக்காமல், தமிழர்கள் விழித்துக் கொள்ளாவிடில், ஒரு ஜக்கியை அல்ல, பல நூறு ஜக்கிகளையும் தமிழ்நாட்டில் உலவ விடும் ஆரியம்! தமிழா விழி!**

“சந்நியாசம்“ வழங்கும் ஜக்கி, தனது மகள் இராதேக்கு சொகுசு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார். அவருக்குத் திருமணமும் செய்து வைத்தார்.

**ஊடகங்கள் பாய்ச்சிய வெளிச்சம்!**

ஜக்கியை ஏன் இவ்வளவு பேர் நம்புகிறார்கள்? இவர் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டது?

1980களின் பிற்பகுதியில், ஜக்கியின் யோகா குருவாக இருந்த ரிஷி பிரபாகர் என்பவரால் தமிழ்நாட்டில் ஆசிரமம் அமைக்க அனுப்பி வைக்கப்பட்ட ஜக்கி, பின்னர் தாமே தனித்து ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு தங்கிவிட்டார். சில நாட்களில் தன்னைத் தானே “சத்குரு“ என்றும் அறிவித்துக் கொண்டார்.

நித்யானந்தாவை நம்பி பல தமிழர்கள் மோசம் போனதற்கு “குமுதம்“ ஏடும் ஒரு முக்கிய காரணம்! “கதவைத் திற காற்று வரட்டும்!“ என்பது குமுதம் ஏட்டில், நித்தியானந்தா எழுதி வந்த தொடரின் தலைப்பு! அதே குமுதம் ஏட்டில், ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அதன் ஆசிரியராக ப்ரியா கல்யாணராமன் என்பவர் (பெண் பெயரில் எழுதிய ஆண்தான்) எழுதிய “சம்போ சிவ சம்போ“ என்ற ஆன்மிகத் தொடர் ஒன்றை வெளியிடத் தொடங்கினர். ஜக்கியின் பல வண்ணப் புகைப்படங்களுடன் அந்தத் தொடர் வெளியானது.

கொஞ்சம் கொஞ்சமாக ஆன்மிகத்தில் தொடங்கிய அத்தொடர், பின்னர் கைலாஷ் மானசரோவர் போய் வந்தவர்கள் உயிரோடு சொர்க்கத்திற்கு போய் வந்ததற்கு சமம் என்கிற அளவிற்கு உசுப்பிவிட்டது. பிறகு அப்படிப் போவதாக இருந்தாலும் “சத்குரு“வுடன் செல்பவர்கள் மட்டுமே சொர்க்கத்திற்குப் போக முடியும் என்கிற அளவிற்கு எழுத ஆரம்பித்தார்கள்.

அதன்பின், ஜக்கி வாசுதேவ் ஆனந்த விகடன் ஏட்டில், “அத்தனைக்கும் ஆசைப்படு!“ என்றொரு தொடரை எழுதினார். மண் பெண் பொன் ஆகிய மூன்றுக்கும் ஆசைப்படாதே என்றது தமிழர்களின் சித்தர் மரபு! அதற்கு மாறாக, “எல்லாவற்றுக்கும் ஆசைப்படு“ என மக்களிடம் நுகர்வியத்தையும், பிறரை மிதித்தாவது “முன்னேற“ வேண்டுமென்ற முனைப்பையும் ஊட்டுவது ஆரிய மரபு! உலகமயத்தின் மரபு! அதுவே ஜக்கியின் முழக்கமும் ஆனது!

மக்களிடம் எழும் மன அமைதியின்மைக்குத் தீர்வாக யோகக்கலையை முன்வைத்துப் பேசி, அதன்பின் அதை ஆன்மிகத்தில் இணைத்து, அதையும் ஆரிய இந்துத் துவப் பண்பாட்டோடும் உலகமய நுகர்வியப் பண் பாட்டோடும் கலந்து வழங்கும் ஜக்கி வாசுதேவ், நித்தியானந்தா, சிறீ சிறீ ரவிசங்கர் போன்ற பல “ஆன்மிக“ சாமிகளுக்கு, இந்த ஊடகங்கள் வழங்கும் முக்கியத்துவம் மக்களை வெகுவாக ஈர்க்கிறது. சமூகப் பொறுப்புணர்ச்சி இன்றி, தனது வணிக நலனுக்காக குமுதம் ஆனந்த விகடன் போன்ற ஏடுகள் ஊதிப் பெருக்கிய நித்தியானந்தா ஜக்கி போன்றவர்கள் இந்துத்துவத்தின் இளைய பங்காளிகளாக வளர்ந்து உலகமயத்தோடு கூட்டணி சேர்ந்து கொள்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்தின் ஆரிய எதிர்ப்பு மரபை உள்வாங்கிக் கொண்டு, தேவாரம் - திருவாசகம் - ஆழ்வார்ப்பாசுரங்களைப் பாடிக் கொண்டு - உண்மையாகவே இறைவனை நாடி கசிந்துருகும் சித்தர்களும், ஆன்மிகவாதிகளும் நிறைந்த தமிழ் மண்ணில், ஜக்கி போன்ற இந்துத்துவ சாமியார்களை வளர்ப்பதில் ஆர்.எஸ்.எஸ். - நரேந்திரமோடி கும்பல்களுக்கு அவ்வளவு ஆர்வம்! அதற்கு இந்த ஊடகங்களும் பக்கத்துணை!

1988ஆம் ஆண்டு கோவைக்கு வந்த போது “சத்குரு“வுக்கு பாரா க்ளைடிங் (Para Cliding) எனப்படும் விளையாட்டு பயிற்சி மையத்தை தொடங்குவதே திட்டமாக இருந்தது. அதற்கான இடத்தை தேடி அலைந்து கொண்டிருந்தார். அப்போது இவர் சிறிய அளவில் தொடங்கிய யோகா வகுப்புகள், கை நிறைய ஊதியம் பெற்றும் மன அழுத்தம் காரணமாக பாதிப்புக்குள்ளாகி இருந்த படித்த மேல்தட்டு வர்க்கத்தினரிடையே பிரபலமாகிக் கொண்டிருந்தது.

இதை நன்றாக உணர்ந்த ஜக்கி, யோகா பயிற்சியை வணிகமயமாக்கினால் கோடிக்கணக்கில் பணம் கொட்டும் என்பதை உணர்ந்தார். 1989ஆம் ஆண்டு முதல், ஜக்கியின் யோகா வகுப்புகள் பிரபலமாகத் தொடங்கின. ஆனால் யோகா கற்க வரும் மனிதர்கள் ஆன்மீகத்திற்கு அடிபணிகிறார்கள் என்பதுதான் பிற்பாடு இவர் அறிந்து கொண்ட உண்மை!

வந்தவர்கள் ஆன்மீகம் என்று நினைத்தது இந்துத்துவத்தையோ அல்லது வேறொரு ஆன்மீக மதத்தையோ அல்ல என்பதையும் அறிந்தார். இருப்பினும் யாராக இருந்தாலும் அவர்களிடம் பொதுவான கடவுளாக ஏற்கப்பட்டிருந்த “சிவனை“ வைத்து, ஒரு தனி மதத்தையே தோற்றுவிக்கும் முயற்சியில் இன்றுவரை ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்.

தற்போது இவர் நிறுவியுள்ள ஆதியோகி சிவன் சிலை, காடுகளை அழித்துக் கட்டப்பட்டது. ஜக்கியின் ஈஷா நிறுவனக் கட்டிடங்கள் பலவும் காடுகளை அழித்து, யானைகள் செல்லும் பாதைகளை மறித்துக் கட்டப்பட்டதுதான்! தமிழ்நாடு அரசின் வனத்துறை ஈஷாவின் இந்த அத்துமீறிய நடவடிக்கைகளைக் கண்டித்து அறிவிப்புகள் வெளியிட்டுள்ளது. ஆனால், அந்தக் கட்டுமானங்களை இடித்துத்தள்ளத்தான் அவர்களுக்கு மனமில்லை!

தமிழர்களின் மரபான ஓகக்கலையை, இந்துத்துவாவாதிகள் “யோகா“ என்ற பெயரில் உருமாற்றுவதும், தென்னாடுடைய சிவனை ஆரியத்திணிப்புகளுக்கு முதலீடாக்குவதும் ஜக்கியின் தொடர்ந்துவரும் “தொண்டு“! இனியும், கண் மூடிக் கிடக்காமல், தமிழர்கள் விழித்துக் கொள்ளாவிடில், ஒரு ஜக்கியை அல்ல, பல நூறு ஜக்கிகளையும் தமிழ்நாட்டில் உலவ விடும் ஆரியம்! தமிழா விழி! ●

வரலாறு அறிவோம்!

கதிர்நிலவன்

# 'பைந்தமிழ் ஆசான்' கா.நமச்சிவாயர்

நினைவு நாள்- 13.03.1936

1906ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பாடங்களைப் படிக்க ஆங்கில அறிஞர்கள் எழுதிய பாடங்களையே படிக்க வேண்டிய நிலை இருந்தது. அப்போது தமிழாசிரியர் ஒருவர் வேதனையுற்று, தம்மோடு பணியாற்றி வந்த எவரிடத்தும் பேச மறுத்து வந்தார்.

அப்போது பள்ளித் தலைமையாசிரியராக இருந்த ஆங்கிலேயர் பேட்ஸ் என்பவரிடம் பள்ளியை விட்டு விலகப் போவதாக தெரிவித்தார்.

பதட்டமடைந்த தலைமையாசியர் “பள்ளியை விட்டு விலகுவதா? ஏன் எதற்காக?” எனக் கேட்டார்.

“தமிழ் கற்கும் மாணவர்களுக்கு முறையான பாட நூல்கள் வெளிவரவில்லை, இல்லையெனச் சொல்லிக் கொண்டே இருப்பதில் பயன் இல்லை. எனவே பாட நூல்களை நானே உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன். ஆசிரியர் பணிபுரிபவர் பாடநூல்கள் எழுதத் தடை இருக்கிறது, எனவே ஆசிரியர் பணியை விட்டு விலகிட முடிவு எடுத்துள்ளேன். அதற்கு அனுமதி தாருங்கள்” என்றார் அந்தத் தமிழாசிரியர்!

அதற்கு பேட்ஸ் மறுமொழியாக, "அறிவில் திறமும். அனுபவத்தில் உரமும் பெற்றுள்ள தங்களைப் போன்றவர்கள் மாணவர்க்கான பாட நூல்களை உருவாக்குவது தான் மிகச் சரியானது, ஆசிரியர் பணியில் இருந்து கொண்டே பாடநூல் உருவாக்குவதற்கு நான் அனுமதி வாங்கித் தருகிறேன்" என்றார்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழ்க்கற்க கீழ் வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை பாடநூல்களை உருவாக்கித் தந்த அந்த தமிழாசிரியரின் முயற்சி பெரும் வெற்றி பெற்றது. அப்பெருமகனார் எழுதிய பாடநூல்கள் அனைத்தும் அப்போது தமிழ் கற்ற பலராலும் ஒப்பற்ற நூல்களாகப் பாராட்டப் பெற்றன.

கல்லூரிக்கும் அவரின் பாடத்திட்டம் வேண்டுமென குரல்கள் ஒலித்தன. தமிழ்ப்பாடத் திட்டத்தை உருவாக்கிய அந்த தமிழாசிரியர் வேறு யாருமல்ல, தமிழரெல்லாம் பொங்கல் திருநாளை தமிழர் திருநாளாகக் கொண்டாடக் காரணமான தமிழறிஞராகிய **கா.நமச்சியவாய முதலியார்** தான்!

வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் எனும் ஊரில் இராமசாமி முதலியார் அகிலாண்ட வல்லி இணையருக்கு மகனாக 20.2.1876இல் நமச்சிவாயர் பிறந்தார். இவரின் தந்தையார் நடத்தி வந்த திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வியைத் தொடங்கினார். அப்போதே நல்வழி, விவேக சிந்தாமணி, நன்னெறி, நீதி நெறி விளக்கம் முதலிய நூல்களைக் கற்றுத் தெளிந்தார்.

பின்னர் தமிழ் இலக்கண, இலக்கியங்களை கற்றுத் தெளிவடைய மகாவித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை அவர்களிடம் மாணக்கராகச் சேர்ந்தார். பனிரண்டு வயது உள்ள போதே, தண்டையார் பேட்டையிலிருந்து மயிலாப்பூர் வரை நடந்தே சென்று



கல்வி கற்பது இவரது வழக்கம். கல்வியில் தேர்ச்சி பெற்றபிறகு சிறிது காலம் சென்னை செயிண்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், பிறகு இராயபுரம் நார்த்லிக் மகளிர் பாடசாலையிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

1902ஆம் ஆண்டு எஸ்.பி.ஜி. உயர்நிலைப்பள்ளியில் (தற்போதைய பெயர் வேப்பேரி புனித பவுல் பள்ளி) பணியாற்றிய போதுதான் அவருக்கு பாடநூல் எழுதும் சிந்தனை துளிர் விட்டது. அப்போது தான் தலைமை யாசிரியர் பேட்ஸ் என்ற ஆங்கிலேயரின் நட்பு அவருக்குக் கிடைத்தது.

நமச்சிவாயருக்கு தாம் கொண்ட மன உறுதியும், பேட்ஸ் தந்த ஒத்துழைப்பும் ஒன்று சேர நூற்றுக் கணக்கான பாடநூல்களை எழுதும்படி தூண்டின. அப்போதே பேரும், புகழும் அவரை வந்தடைந்தன. "தமிழ்ப்பேராசான்" நமச்சிவாயர் என்று அனைவரும் அழைக்குமளவிற்கு அவர் பெயர் நிலைபெற்றது.

1906ஆம்ஆண்டில் சுந்தரம் அம்மையார் என்ற நங்கையை மணந்து இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்தார். அவர் திருத்தணிகை முருகன் மீது தீராப் பற்று கொண்டவர். தன் இரண்டு புதல்வர்களுக்கும் தணிகை வேல், தணிகை மணி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். மற்ற இரண்டு புதல்விகளுக்கு பட்டம்மாள், மங்கையர்க்கரசி என்று அழகிய தமிழில் பெயரிட்டார்.

நமச்சிவாயர் சென்னை சிங்கிலர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளரக பணியாற்றிய போது இராணி மேரி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்ற அழைப்பு விடுக்கப்பட்டது. 1914ஆம் ஆண்டு இராணிமேரிக் கல்லூரி பெண்களுக்கென்று உருவாக் கப்பட்டது. தமிழ்ப் பேராசிரியராக ஆண்கள் எவரும் பணியாற்ற முன்வராத நிலையில் இவர் துணிவோடு அங்கு பொறுப்பேற்று பணியாற்றியதை அனைவரும் பாராட்டினர்.

அக்காலத்தில் வடமொழி பயின்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுந்தான் சென்னைப் பல்கலைக் கழகம் பட்டமளிப்பு விழா நடத்தி சிறப்பித்து வந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கமும், திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியும் தமிழில் தேர்வு நடத்திய போதிலும் அரசினரின் உரிய ஏற்பிசைவைத் தமிழ் பயின்றவர்கள் பெறமுடியாமல் தவித்து வந்தனர்.

**"ஆங்கிலம் படிப்பவர்கள் விஞ்ஞான சாத்திரங்கள் முதலிய நூல்களை முயன்று தமிழில் எழுதி வெளியிட வேண்டும். அவர்கள் தக்க தமிழராசிரியர்களைத் துணையாகக் கொள்ளுதலே சாலப் சிறப்பாகும்.**

**எனக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும், தமிழ் எழுத வராது என்று சொல்லி, காலம் கழிக்கின்ற ஆங்கில அறிஞர் பலர்.**

இந்நிலையில் 1920இல் சென்னைப் பல்கலை.யின் தமிழ்க்கல்வி குழுவிற்கு தலைவராக நமச்சிவாயர் அமர்த்தப் பட்டார். வடமொழிக்கு வாழ்வும் தமிழ் மொழிக்குத் தாழ்வும் கற்பிக்கும் இழிநிலை கண்டு நெஞ்சம் குமுறினார்.

தமிழ் பயின்றவர்களுக்கு அரசு உரிய ஏற்பிசைவு தர முடிவு செய்தார். அதன்படி, "தமிழ் வித்துவான்" தேர்வு முறையை அறிமுகம் செய்து அதில் தேர்வெழுதி தேர்ச்சி பெறுபவர்களுக்கு பல்கலைப் பட்டம் அளிக்கப் படும் என்றும், அத்தேர்வில் வெற்றி பெறுப வர்களுக்குப் பள்ளிகளில் தமிழாசிரியர் பணி தரவேண்டும் என்றும், தமிழாசிரி யர்களுக்கு ஊதியம் ரூபாய் 45 முதல் 75 வரை வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

வடமொழி பயின்று வந்த "பூணூல் திருமேனியருக்கு" நமச்சிவாயரின் பல்வேறு அறிவிப்புகள் பேரதிர்ச்சியைத் தந்தது. அங்கு பதினான்கு ஆண்டுகள் வரை தலைவராக இருந்து தமிழுக்குரிய இடத்தைப் பெறுவதில் விடாது போராடி வந்தார்.

1921இல் பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை யடிகள் தலைமையில் தமிழ்ப்புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் ஆண்டு தீர்மானிப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் பங்கேற்ற முதன்மையான ஏழு தமிழறிஞர்களுள் இவரும் ஒருவர். அக்கருத்தரங்க கூட்டத்தில் முன்னிலை வகித்து தைப் பிறப்பே தமிழர் ஆண்டு பிறப்பு என்று முழங்கினார்.

அறிவியல் நூல்களைத் தமிழில் வெளிக்கொணர வேண்டும் என்பதில் உறுதி கொண்ட நமச்சிவாயர் அக்கருத்தை (27.9.1930) கரந்தை தமிழ்ச்சங்கத்தில் உரையாகவும் ஆற்றினார். அது பின்வருமாறு:

"ஆங்கிலம் படிப்பவர்கள் விஞ்ஞான சாத்திரங்கள் முதலிய நூல்களை முயன்று தமிழில் எழுதி வெளியிட வேண்டும். அவர்கள் தக்க தமிழராசிரியர்களைத் துணையாகக் கொள்ளுதலே சாலப் சிறப்பாகும். எனக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும், தமிழ் எழுத வராது என்று சொல்லி, காலம் கழிக்கின்ற ஆங்கில அறிஞர் பலர். சர்வகலாசாலை ஏற்பட்டு வெளிவந்த பட்ட தாரிகள் ஐம்பதினாயிரவருக்கு மேலும் ஆவர், அவர் களில் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த செய்தியைக் குறித்து ஒவ்வொரு சிறுநூல் செய்திருப்பின், ஐம்பதினா யிரம் நூல்கள் ஆகியிருக்குமே! ஒவ்வொரு வரும் தம்தம்

வயிற்றுப் பாட்டைப் பார்த்தனரே யன்றி, தம் தாய் மொழியின் வளர்ச்சியைக் கருதினாரில்லையே!"

நமச்சிவாயர் பாடநூல் ஆசிரியராகப் புகழ்பெற்ற காலத்திலேயே பதிப்புத்துறையிலும் புகழ்பெற்று விளங்கினார், தமிழ்ச் சிற்றிலக்கணம், ஆத்திசூடி முதலாகப் பல சிறிய நூல்களை உரையெழுதி வெளியிட்டார்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றை இளம்பூரணர் உரையுடன் வெளியிட்டார். தணிகைப் புராணம், தஞ்சைவாணன் கோவை, இறையனார் களவியல் முதலிய நூல்களைத் திருத்தப் பதிப்பாக வெளியிட்டு தமிழறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்.

தமது பதிப்பகத்திற்கு பாடநூல் எழுதித் தரும் தமிழாசிரியர்களுக்கு சிறப்புச் செய்திடும் வகையில் "தமிழர் திருநாள்" பெயரில் ஆண்டுதோறும் விழா நடத்திய முதல் தமிழர் என்ற பெருமை இவரையே சாரும்!

1934இல் தமிழர் திருநாள் கொண்டாடிய போது, தமிழைப் போற்றும் பாடல் இயற்றினார். அது பின்வருமாறு:

"தேனினும் இனிய செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குற திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வாய் ஒளிர் தமிழ்மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணா வயங்கு தென்மொழியே!
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி ஓங்குவாய் தண்டமிழ் மொழியே!"

நமச்சிவாயர் செல்வந்தராக வாழ்வில் உயர்வு பெற்ற போதிலும் தன்னை ஏற்றிவிட்ட ஏணியாம் தமிழை மறக்கவில்லை. தாம் கட்டிய இல்லங்களுக்கு காவேரி அகம், கடல் அகம், குறிஞ்சி வீடு என்று அழகிய தமிழில் பெயர் சூட்டினார்.

பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர்களுக்கென நல்லாசிரியன் எனும் திங்களிதழை நடத்தி வந்தார். அதில் தமிழ், தமிழர் பெருமை கூறும் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். 1936ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின் போது திருவள்ளுவர் திருநாள் கழகத்தை தோற்றுவித்தார். அவ்வாண்டே அவருக்கு அறுபதாம் அகவை மணிவிழா ஆண்டாகப் பிறந்தது. இதனையொட்டி மணிவிழா மலர் எழுதி வெளியிடத் திட்டமிட்டிருந்த நிலையில் 13.3.1936இல் எழுது வதை நிறுத்துக் கொண்டார். அப்போது தமிழ் மண்ணை விட்டு மறைந்து தமிழறிஞர்களின் நெஞ்சங்களில் நிறைந்திருந்தார்.

***நமச்சிவாயர் புகழ் ஓங்குக!***

# பிறந்தநாள் வாழ்த்துகள்!



தமிழ்த்தேசியப் பேரியக்க சென்னை நடுவண் கிளை உறுப்பினர் தோழர் சுரேசு – தோழர் செல்வா இணை யரின், அன்பு மகன் – மழலை **சு.செ. நாவளவன்** முதலாம் ஆண்டு பிறந்தநாள், 27.02.2017 அன்று, சென்னை தமிழ்த்தேசியப் பேரியக்க அலுவலகத்தில் சிறப்புற கொண்டாடப்பட்டது.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன், நேரில் வருகை தந்து மழலை நாவளவனை வாழ்த்தினார். பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப் பினர் தோழர் க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் வெற்றித்தமிழன், தென்சென்னை செயலாளர் தோழர் கவியரசன், வடசென்னை செயலாளர் தோழர் செந்தில் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்களும், உறவினர்களும் பங்கேற்றனர்.

பிறந்தநாளையொட்டி, தமிழர் கண்ணோட்டம் இதழ் வளர்ச்சிக்கு ரூபாய் 1,000 அன்பளிப்பு வழங்கப்பட்டது. மழலை நாவளவன், சீரும் சிறப்பும் பெற்று பல்லாண் டுகள் வாழ அன்புடன் வாழ்த்துகிறோம்!

# மணமக்கள் நீடு வாழ்க!



தஞ்சை திரு. ஆர். வரதராசன் – திருவாட்டி. வ. சகுந்தலா இணையரின் அன்பு மகனும், வல்லம் அன்னை தெரசா கல்லூரித் தலைவருமான செல்வன் **வ.பால்ராசு** M.Sc(IT)., M.Phil.(CS).,–க்கும், திரு. வி. பழனிச்சாமி – திருவாட்டி ப. மாரியம்மாள் இணையரின் அன்புமகள் செல்வி **ப.வாசுகி** D.Ted.,–க்கும், 11.02.2017 அன்று திருமண வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது.

தஞ்சை பிள்ளையார்பட்டி ஐ.எம். மகாலில் நடை பெற்ற திருமண வரவேற்பில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன், அ.தி.மு.க. அம்மா பேரவை மாவட்டத் துணைச் செயலாளர் திரு. சிவ. திருஞானசம்பந்தம், பேரியக்க மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, ஒன்றியச் செயலாளர் தோழர் அ. தேவதாசு உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பில், தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ. 2,000 அன்பளிப்பு வழங்கப்பட்டது. மணமக்கள் நீடு வாழ்க!

“பவானியில் கேரள அரசு தடுப்பணை கட்டுவதை நிறுத்தவில்லையென்றால், கோவை - திருப்பூர் - ஈரோடு மாவட்டங்களில் வாழும் மலையாளிகளை கேரள அரசு திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்“ என தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் கோவையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு நீர் கூட வரக்கூடாது என்ற முடிவோடு, பவானி ஆற்றில் கேரள அரசு ஆறு தடுப்பணைகள் கட்டி வருகிறது. கேரள மாநிலம் - தேக்குவட்டையில் கட்டப் பட்டு வரும் தடுப்பணையை, 17.02.2017 முற்பகல் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் தலைமை யிலான குழுவினர் நேரில் சென்று பார்த்து வந்தனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்க கோவை மாநகர்ச் செயலாளர் தோழர் விளவை இராசேந்தின், பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி, கோவை த.தே.பே. தோழர் திருவள்ளுவன், எழுத்தாளர் வான்முகில், தமிழக இளைஞர் முன்னணி நடுவண் குழு உறுப்பினர் தோழர் மாவீரன் உள்ளிட்ட தோழர்கள் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

அதன்பின் கோவை செய்தியாளர் மன்றத்தில் ஊடகவி யலாளர்களைச் சந்தித்த தோழர் பெ. மணியரசன் பின்வருமாறு தெரிவித்தார்:

“இன்று காலை கேரள மாநிலம் - அட்டப்பாடி அருகில் தேக்குவட்டையில் கேரள அரசால் தடுப் பணை கட்டப்பட்டு வரும் இடத்தை பார்வை யிட்டோம். அங்கு தொடர்ந்து கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கிருந்த ஊர் மக்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களை கேட்டபோது, பவானி ஆற்றில் இன்னும் ஐந்து இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். ஏற்கெனவே அங்கு பொரிக்காரி மடுவு என்ற 100 அடி ஆழமான இயற்கையான நீர்த் தேக்கம் இருப்பதாகவும், அதை வைத்து அம்மக்கள் தங்கள் குடிநீர் தேவைகளை நிறைவு செய்து கொள்வதாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் கேரள அரசு, இப்பகுதி மக்களின் குடிநீர் மற்றும் பாசன நீருக்காகவே தடுப்பணைகள் கட்டுகிறோம் என்று கூறுகிறது. உண்மையில், பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் நெடுந்தொலைவில் உள்ள கேரளப் பகுதிகளுக்கு பவானி நீரைக் கொண்டு செல்லும் முயற்சியாகவே, இந்தத் தடுப்பணைகளைக் கட்டி வருகிறது. இந்தத்







# பவானியில் தடுப்பணைகள் கட்டினால் மூன்று மாவட்ட மலையாளிகளைத் திரும்ப அழைத்துக் கொள்க!

## கேரளத்திற்குப் பெ. மணியரசன் கோரிக்கை!

தடுப்பணைகளில் தேங்கும் தண்ணீரை பெரிய அளவிலான பம்புகள் வைத்து கொண்டு செல்லத் திட்டமிடுகிறது. ஆற்று நீரைக் கொண்டு பாரம்பர்யமாக வேளாண்மை நடைபெற்று வந்த பகுதிகளுக்குத்தான் Riparian Right என்ற பாசன உரிமை பொருந்துமே தவிர, புதிதாகப் பாசன விரிவாக்கம் நடைபெறும் பகுதிகளுக்கு இது பொருந்தாது.

ஏற்கெனவே காவிரித் தீர்ப்பாயம், காவிரி ஆற்றில் தடுப்பணைகளைக் கட்டுவதற்கு முன், அத்தண்ணீரைப் பாரம்பர்யமாக பாசன நீராகப் பயன்படுத்தி வரும் கடைமடை மாநிலத்தின் அனுமதியைப் பெற வேண்டும் எனக் கூறுகிறது.

கேரள அரசு பவானி ஆற்றில் சட்ட விரோதத் தடுப்பணைகள் கட்டி, தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வரவிடாமல் தடுக்க முற்பட்டுள்ளது. இதன் காரணமாக, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் சற்றொப்ப 3 இலட்சம் ஏக்கர் சாகுபடி முற்றிலுமாக பாதிக்கப்படும். இம்மூன்று மாவட்டங்களிலுள்ள 1 கோடி மக்களின் குடிநீர் பறிக்கப்படும். ஒட்டுமொத்தமாக இம்மூன்று மாவட்ட மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்படும் அபாயமுள்ளது.

கேரளத்திற்குத் தண்ணீர் வளம் ஏராளமாக உள்ளது. கேரளத்தில் அரபிக்கடலில் ஆண்டுக்கு 2,000 ஆ.மி.க. தண்ணீர் கடலில் கலக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்கள் முயன்றால் பவானி நீரைத் தடுக்காமல், பிற பகுதி தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், தமிழ்நாட்டுக்கு அந்த வாய்ப்பில்லை.

எனவே, கேரள அரசு பவானியின் குறுக்கே ஆறு தடுப்பணைகள் கட்டும் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கேரள அரசுக்கும் இந்திய அரசுக்கும் அரசியல் அழுத்தம் கொடுத்து, இத்தடுப்பணைகள் கட்டும் பணியை நிறுத்த வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர், இக்கோரிக்கைக் காக கேரள முதல்வரையும், இந்தியத் தலைமை அமைச்சரையும் நேரில் சந்தித்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

காவிரித் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை மீறி கர்நாடக அரசு காவிரியில் அணைகள் கட்டுவதையும், ஆந்திர அரசு பாலாற்றில் அணைகள் கட்டுவதையும் இந்திய அரசு இதுவரை தடுக்கவில்லை. காவிரிச் சிக்கலில் உச்ச நீதிமன்றம், தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புகளை செயல்படுத்தும் சட்டக்கடமையையும் இந்திய அரசு நிறைவேற்றவில்லை. தொடர்ந்து, தமிழினத்திற்கு எதிரான இனப்பாகுபாட்டு அணுகுமுறையை இந்திய அரசு கடைபிடித்து வருகிறது. இந்தச் சிக்கலிலும் இது தொடர்கிறது.

இந்திய அரசும், கேரள அரசும் நடவடிக்கை எடுத்து பவானி ஆற்றில் அணை கட்டும் திட்டத்தைக் கைவிடச் செய்யவில்லையென்றால், தங்கள் வாழ்வுரிமையைக் காப்பாற்றிக் கொள்ள அறப்போர் நடத்துவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை!

கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் மலையாளிகள் பல இலட்சம் பேர் வாழ்கிறார்கள்; தொழில் செய்கிறார்கள்; வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கும் குடிநீர், குடும்ப நீர், தொழில் துறைக்கான நீர் பவானியிலிருந்துதான் கிடைக்கிறது.

முல்லைப் பெரியாறு அணை வழக்கில் சிற்றணையைச் செப்பனிட்டு முழுக் கொள்ளளவான 152 அடி தண்ணீரைத் தமிழ்நாடு தேக்கிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், சிற்றணைக்குக் கட்டுமானப் பொருள் எதையும் தமிழ்நாடு பொதுப் பணித்துறை கொண்டு செல்ல கேரள வனத்துறை அனுமதிக்கவில்லை. அதுமட்டுமின்றி, அணைக்கு அன்றாடம் நம் அதிகாரிகள் உரிமையுடன் சென்று வர முடியவில்லை. இதில், இந்திய அரசு தலையிட்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த முன்வரவில்லை. இதிலும் இந்திய அரசு தமிழர்களுக்கு எதிரான இனப்பாகுபாடு அரசியல் நடத்துகிறது.

தமிழர்களுக்கு எதிரான இந்திய அரசின் இந்த இனப்பாகுபாடு பா.ச.க. ஆட்சியில் மட்டுமில்லை, காங்கிரசு ஆட்சியிலும் செயல்பட்டது. எனவே, இந்திய அரசமைப்புச் சட்டம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் வழியாகத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி மறுக்கப்படும்போது, வாழ்வுரிமை பறிக்கப்படும்போது, தமிழர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தோம்.

பவானியில் புதிய அணைகள் கட்டும் திட்டத்தைக் கேரள அரசு கைவிடவில்லையென்றால், பவானித் தண்ணீரைப் பயன்படுத்தும் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் வாழும் மலையாளிகளைக் கேரள அரசு திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பேரியக்கம் கேட்டுக் கொள்கிறது. அவ்வாறு அழைத்துக் கொள்ள கேரள அரசு மறுத்தால், தமிழர்கள் இம்மூன்று மாவட்டங்களில் வாழும் மலையாளிகளின் வீட்டு வாசலுக்குச் சென்று கேரளாவுக்குத் திரும்பிச் செல்லுமாறு அறவழியில் அவர்களைக் கேட்டுக் கொள்ளும் மக்கள் இயக்கத்தைத் தமிழ்த்தேசியப் பேரியக்கம் நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்".

இவ்வாறு தோழர் பெ. மணியரசன் பேசினார்.

தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தோழர்கள் ஸ்டீபன்ராஜ், இராசேசுக் குமார், திருப்பூர் சிவக்குமார் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்கள் உடனிருந்தனர்.

•

# மூத்த தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியம் காலமானார்



இருநூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதி தன் தள்ளாத அகவையிலும் தான் வாழும் ஊருக்கு "தமிழூர்" எனப் பெயர் மாற்றி தமிழுக்குத் தொண்டாற்றி வந்த மூத்த தமிழறிஞர் ஐயா நெல்லை ச.வே. சுப்பிரமணியம் அவர்கள், கடந்த 12.01.2017 அன்று நெல்லையில் காலமானார். அவருக்கு அகவை 88.

திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் பிறந்த ச.வே.சு. அவர்கள், 1950களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பெற்றார். பின்னர், கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். திருவனந்துபுரம் பல்கலைக் கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றிய ஐயா ச.வே.சு. அவர்கள், பின்னர் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றினார்.

தமிழில் 55 ஆய்வு நூல்களையும், ஆங்கிலத்தில் 5 நூல்களையும் எழுதி வெளியிட்ட ஐயா ச.வே.சு. அவர்கள், தாம் எழுதிய "தமிழ் நிகண்டுகள்" என்ற நூலுக்கு 2008ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூல் பரிசு பெற்றார்.

தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்துள்ள முனைவர் க.ப. அறவாணன், கவிக்கோ அப்துல் இரகுமான் உட்பட இன்றைக்குப் பல அறிஞர் பெரு மக்களுக்கு, ஐயா ச.வே.சு. அவர்களே முனைவர் பட்ட வழிகாட்டியாக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சங்கத்தமிழ் இலக்கியமான தொல்காப்பியத்துக்கு தெளிவுரை எழுதிய ஐயா ச.வே.சு. அவர்கள், சங்க இலக்கிய நூல்கள் பலவற்றையும் தெளிவாகச் சொற்கள் பிரித்து அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அதன் மூலத்தை பதிப்பித்தது அருந்தொண்டாகும்.

உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்த ஐயா ச.வே.சு. அவர்கள், சனவரி 12 (2017) அன்று மருத்துவமனையில் திடீரென்று காலமானார். ஐயா ச.வே.சு. அவர்களின் மறைவுக்கு தமிழ்த்தேசியப் பேரியக்கம் ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது! •


## தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

### உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்

**வெளியிடும் இடம்** :
21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.
தொலைபேசி : 044-24742911

**வெளியிடும் காலம்** : மாதம் இரு முறை

**அச்சிடுபவர் பெயர்** : டி.முத்துக்குமார்

**இந்தியக் குடிமகனா?** : ஆம்

**முகவரி** :
பிரிண்ட் பாஸ்ட்,
53/1, ஓராண்டியம்மன் கோயில் தெரு,
வேளச்சேரி, சென்னை - 600042.

**உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்** : பெ. மணியரசன்

**இந்தியக் குடிமகனா?** : ஆம்

**ஆசிரியர் பெயர்** : பெ. மணியரசன்

**முகவரி** :
21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.
தொலைபேசி : 044-24742911

பெ. மணியரசன் ஆகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதி அளிக்கிறேன்.

ஒப்பம்

**பெ.மணியரசன்**
வெளியிடுபவர்




Owned and Published by P.Maniarasan from 21, 1st Street, 1st Sector, Kalaignar Karunanidhi Nagar, Chennai- 600 078 and printed by T.Muthukumar at Print Faast, 53/1,Orandiamman Koil Street,Velachery, Chennai-600042, Editor: P. Maniarasan

# மகளிர் நாள் வாழ்த்துக்கள்

எதிர்நீச்சலடித்துக்
கரையேறியிருக்கிறேன்
புதுவெள்ளஆற்றில்.

வெற்றுக்கால்களுடன்
நடந்துகடந்திருக்கிறேன்
முள்காடுகளை.

இடியும்மின்னலுமாய்
அடித்துப்பொழிந்த
கனமழையில்நின்று
களைபறித்திருக்கிறேன்.

படமெடுத்தாடிய
பாம்புகளின்முன்நின்று
வேடிக்கைப்பார்த்திருக்கின்றேன்,
அச்சம்துளியுமற்று.

இன்றோ..
நம்பிக்கை துணிச்சலென
நாள்தோறும்
பேசிக் கொண்டிருக்கிறேன்
மற்றவர்களிடமல்ல
என்னிடம் நானே
கண்கலங்காது கடக்க முடியாத
அன்றாடச் செய்திகளால்...

இங்கே...
இணங்கமறுக்கும்
எச்செயலுக்காகவும்
கழுத்தறுக்கப்படுகிறாள் பெண்.

செல்லும்வழிகளில்
குடிநோயாளிகளின்
கெட்டவார்த்தைகளால்
கேவலப்படுத்தப்படுகிறாள்.

வெறியுடன் வீசப்பட்ட
அமிலங்களில் வெந்து
சிதைந்து கிடக்கிறாள்.

முகம் இணைப்பிக்கப்பட்ட
நிர்வாணப் படங்களாக
வலைத்தளங்களில்
அவமானப்படுத்தப்படுகிறாள்.

தாயென தேசத்தைப்
போற்றிப் புகழ்கின்ற
தன்னிநிகரற்ற
தெய்வீகத் திருநாடென
பாடங்கள் தோறும்
எழுதப்பட்டிருந்தாலும்
உண்மையில்,
எமது விடுதலையென்பது
ரயில் நிலையங்களில்
குருதிப் பெருக்கோடு
வீழ்ந்து கிடக்கிறது.

இரவு நேரப் பேருந்துகளிலும்
புதர்க்காடுகளிலும்
வலி பொறுக்க முடியாமல்
அலறிக் கொண்டிருக்கிறது.

கடும் சித்திரவதைகளுக்குப் பின்
கல்லைக் கட்டி
கிணற்றில் வீசப்படுகிறது.

வல்லுறவுகளில் கொல்லப்பட்ட
சிறுமிகளின் எரிக்கப்பட்ட
கரிக்கட்டைகளாக
பொசுங்கிக் கிடக்கிறது.

அதனாலென்ன,
நகைக்கடை துணிக்கடைகளின்
தள்ளுபடிகளோடு கொண்டாடி...
பரிமாறிக் கொள்வோம்
மார்ச் 8 மகளிர் நாள் வாழ்த்துக்களை
மகிழ்வுடனும் பெருமையுடனும்...



கவிஞர் இளம்பிறை



Registered with registrar of news papers for RNI No. TN TAM / 2009 / 28475
Regd. No TN / CC / (S) DN / 478 / 16 -18 WPP License No. TN / PMG (CCR) / WPP - 239 / 16 -18
Date of Publication 1st & 16 th of every month

# பங்குச் சந்தைக் குறிப்புகள்




சட்டமன்றத்தில்
பட்டியலிடப்பட்ட பங்குகளின் மீது
முதலீட்டு ஆலோசனை

கோட்டையைச் சுற்றி நடக்கும்
கூச்சல் கண்டு
குழம்ப வேண்டாம்

மொத்தப் பணத்தையும்
ஒற்றைப் பங்கை நம்பி
போட்டவர்களுக்குத்தான்
நட்டத்திற்கான வாய்ப்பு

பெரு முதலீட்டாளர்கள்
அப்படிச் செய்வதில்லை

பரஸ்பர நிதியைப் போல்
ஆளுங்கட்சி,எதிர்க்கட்சி
இரண்டு உறுப்பினர்களைக்
கொண்ட தனிக்கட்சியென
பணத்தை பிரித்துப்போட்டால்
பாதகமில்லை

பணத்தை போட்டோமா
பாயைப் போட்டு படுத்தோமா
என இருந்துவிடக்கூடாது
களத்தைக்
கண்காணிக்க வேண்டும்

சொகுசுப் பங்களாவுக்குள் வைத்து
கூடம் காட்டுவது
சமாதிக்கு முன் சம்மணமிடுவது
சட்டையை கிழித்துக் கொள்வதென
ஆட்சியை பிடிக்க முயலும்
நிறுவனங்களின்
நடவடிக்கைகளுக்கேற்ப
கூடுதல் முதலீட்டைக்
கொட்டலாம்
நமக்குச் சாதகமானதை
மக்களுக்குச் சாதகமானதென
மாற்றிச்சொல்ல
ஊடகத்துக்குச் கொஞ்சம்
ஒதுக்கிவிடுங்கள் – அதில்
சிக்கனம் வேண்டாம்

சர்வதேசப் பொருளாதாரம்
சரிவைச் சந்தித்தாலும்
இந்தியாவைப் பொருத்தவரை
கட்சிகள் மீதான
நன்கொடைக்கு வரிவிலக்கும்
கட்சிகளின் வருமானத்துக்குக்
கணக்கு
காட்டவேண்டியதில்லை யெனும்
அழகான சட்டங்களிருப்பதால்
சந்தை முதலீட்டுக்கு
சாதகமான நாடு

அப்புற மென்ன....

இந்திய ரூபாயில்
ஏராளமாய் இருந்தால் – ஒரு
முதலமைச்சரை வாங்கிவிடலாம்
அமெரிக்க டாலர்
அதிகமாயிருந்தால் – ஒரு
பிரதமரை வாங்கிவிடலாம்

தேவை
கொஞ்சம் பணம்
கொல்லு கொலைக்கு
அஞ்சாத மனம்.



பாவலர் முழுநிலவன்